வெள்ளம் வழிந்தது! உள்ளம் வியந்தது!!

திராவிடநாடு

மலர் 11 | 3—5—53 | இதழ் 44

விலை 3 அணா

தி. மு. க. மாநாட்டில் மக்கள் கடல்

பெய்த மழையையும் பொருட்படுத்தவில்லை

கரம்பு நிலம் 'கட்டிலாக' மாறியது

மக்களின் ஆர்வம்--இதயம் கவர்ந்தது

'லால்குடி'யின் காட்சிகள்

இரவு மணி ஒன்றிருக்கும். கோல நிலவு, கொஞ்சி விளையாடிக்கொண் டிருந்தது.

சந்தன ஒளியை வாரியிறைக்கும் அந்த இன்பக் காட்சியை ரசித்தவாறு, வெளியில் வந்தேன்.

பகலில் இடியோசையெனக் கையொலியும், கர்ஜனையும் கேட்ட அந்த இடத்தில், அமைதி அரசோச்சிக்கொண்டிருந்தது.

இரவு-ஓர் இரகசியக் குகைதான்! இல்லையெனில், பகலில் நான்கேட்ட முழக்கங்களும், கண்டகாட்சிகளும், எங்கேபோய் ஒளிந்திருக்கமுடியும்? நிர்மலமான ஆகாயமும், அங்கே நீலோற்பலம்போல கிடக்கும் விண்மீன்களும், நீந்திவிளையாடும் நிலவும், என்னைக் கவர்ந்தன.

பந்தலைத்தாண்டி வெளியில் வந்தேன்!-அப்பப்பா, எவ்வளவு பெரிய பந்தல் என்றெண்ணியவாறு பந்தலின் வாயிலைப் பார்த்தேன். வானத்து விளக்கை வப்புக்கிழுப்பதுபோல, வசீகரமான விளக்குகள் ஒளிவீசிக்கொண்டிருந்தன. அதன் த்தியில், மாண்ட மாவீரர் பாண்டியனார் உட்கார்ந்திருந்தார். திகைத்தேன். ஊன்றிக் கவனித்தேன். சென்னை பானு பிரதர்ஸார் தீட்டியளித்த ஓவியம், அது. அவ்வளவு அழகுடன் இருந்தது.

முகப்பின் உச்சியில் ஒரு ஒளி விளக்கு, நான்குபுறமும் சுழன்று சுழன்று வீசியபடி, 'இதுதான் லால்குடி மாநாட்டுப் பந்தல்!' என்று ரத்தே வருவோர் போவோருக்கு ளக்கிக் கொண்டிருந்தது. ஆழ் கடலின், அலையும் சுறுவால் அலைக்கழிக்க, நிலைதவறித் திண்டாடும் கலன்களுக்கு வழிகாட்ட, கடலருகில் இருக்கிறது கலங்கரைவிளக்கம். அதேபோல, ஆரியச் சுறுவும் வைதிகப் புயலும் அலைக்கழிக்க வாழ்வின் நிலைதை மறந்து தத்தளிப்போரே, வாரீர்! இதோ இருக்கிறது முன்னேற்றக் கழகப்பாதை!!—என்று, அழைப்பதுபோலிருந்தது, மாநாட்டுப் பந்தலின் மேலிருந்த ஒளி விளக்கு.

சிந்தையைக் கவர்ந்தஅந்தக் காட்சியைக் கண்ட என்னை, திடுக்கிட வைத்தது ஓர் காட்சி.

மருண்டேன்-கண்ணுக் கெட்டிய தூரம்வரையில் அதே காட்சிதான்! என்ன வேடிக்கை, இது! என்று வியப்பு மேய்ந்தது, இதயத்தில்.

பந்தலைச்சுற்றி பளிங்கு மேடையல்ல, இருந்தது. பள்ளமும், மேடும் நிரம்பிய திடல். புல் கூட இல்லை, கண்ணைக் கவர! சில இடங்களில்மட்டும், சின்னஞ் சிறுமணற் குவியல்கள்—ஆரிய அக்கிரமங்களை தாண்டி, அழகு கொழிக்கும் தமிழ்க் காவியங்கள்போல. அவையும் நண்பகல் வெயிலால், தாம் பெற்ற கொதிப்பை, உலகுக்கு வெளியிட்டுக்கொண்டிருக்கும் நள்ளிரவு. அந்த இடத்திலே விந்தைக்குரிய காட்சியைக் கண்டேன்.

கையே தலையணையாக, கரம்பு நிலமே கட்டிலாக, ஒருவரல்ல-இருவரல்ல, பத்தாயிரக்கணக்கான மக்கள் படுத்துக்கிடந்தார்கள். மக்கள் நடமாடும் அழகைக் கண்டிருக்கிறோம் — வெள்ளம்போல் மக்கள் கூட்டம் என்றும் ஒப்பிட்டுக்கூறுவோம்—அலை அலையாக மனிதத் தலைகள் என்று ஆச்சரியக் குறிகளையும் குவித்திருக்கிறோம். ஆனால், அன்றுதான் நான் கண்டேன், ஆயிரக்கணக்கானோர், இரவு ஆட்சி செலுத்தும்போது, ஓரிடத்தில் தூங்கினால் எப்படியிருக்கும் அக்காட்சியென்பதை!

அத்தனைபேரும், மாநாட்டிற்கு வந்தவர்கள். அவர்களை வரவேற்று, 'வருக! இதோ—படுக்கை அறை', 'அங்கே ஸ்நானகட்டம்!' என்று உபசரிக்க மாநாட்டு நிர்வாகிகள் என்ன, மிட்டா மிராசுகளா? அல்லவே! அதனால், அவர்களைக் கவனிக்கவும் முடியவில்லை. அவர்களுமென்ன, இந்த வசதிகளெல்லாம் இருந்தால்தான் மாநாட்டிற்கு வருவோம் என்று கூறும் பண்பினரா? அல்ல! அல்ல!! நம் இனம்—நம் கூட்டம். எனவேதான், வானமேகூரை! நிலவே காவலன்! என்று கவலையற்றோராய் அந்தக் கரம்பு நிலத்திலே, இரவைக் கழித்துக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைப் பார்த்தபோது, அயர்ந்து தூங்கும், இந்த உருவங்களா மாநாட்டுப்பந்தலை அதிரவைத்தன?—என்று எண்ணத் தோன்றிற்று.

முற்காலப் பாசறை வீரர்கள், விரோதிகளை முறியடித்து வெற்றி முழக்கத்தோடு ஊர் திரும்பும் வழியில் தங்க நேர்ந்தால், தத்தமது காதலியைக் காண்பதெப்போது எனும் கனவில்மூழ்கிக் கிடப்பராம். அந்த வர்ணனைகளை, இலக்கியப்பூங்காவில், ஏராளமாகக் காணலாம். அவைகளை ரசித்திருக்கிறோம்—கண்டதில்லை. ஆனால், இந்தப் பாசறை வீரர்கள், மாடிவீட்டுக்கருகில் கிடக்கிறார்களே, இவர்களுக்கு என்ன கனவிருக்கும் இப்போது?- ஆம்! ஒரே, கனவுதானிருக்கமுடியும். அந்தக் கனவை நினைவாக்கத்தானே காட்டைக் கட்டிலாக்கிக் கொண்டு, கிடக்கிறார்கள்! ஆகா, அவர்களின் இலட்சிய வெறியின் சிறப்புதான் எத்தகையது — இவ்வளவு வெறியை ஊட்டும் இலட்சியந்தான் எத்தகையது!

*

கடந்த 25, 26—4—53 தேதிகளில் திருச்சி மாவட்டம் லால்குடியில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளுக்கு வந்து கூடியிருந்தோரின் கொள்கைப் பற்றும், இலட்சிய வெறியும் நம்சிந்தையெலாம் குளிரச் செய்தன. மாநாட்டுப் பந்தலைக் கண்டோர், மிகப் பெரிய பந்தலென்பர்! ஆனால், பந்தல் நிரம்பி, உட்காரவும் இடமின்றி, மக்கள் நிற்கநேரிட்டது!! வெள்ளம் வழிந்தது — நிரம்பி, வழிந்தது — இருக்க இடமின்றி வழிந்தது. மாநாட்டுக்கு முதல்நாள் இவ்வளவு பெரிய பந்தலா என்று கேள்விக்குறி எழுப்பியோரெல்லாம், மாநாட்டன்று, 'பந்தல் போதவில்லையே!' என்று முகம் சுளித்தனர். அந்தளவுக்குப் பெருங்கூட்டம்! அதிலும், முதல் நாளிரவு நடைபெறவிருந்த 'காதல் ஜோதி' நாடகம் காண, வந்திருந்த ஜனவெள்ளம், அப்பப்ப, சொல்லிமுடியாது.

"நாடகமாம் நாடகம்! வீண் வேலை, கூத்தாடியா கொள்கைகளைப் பரப்புவது?"

"நாடகங்களைக் கண்டிக்க ஆரம்பித்தோம் — இப்போது நாடகங்களுக்கிருந்த 'மவுசு' குறைந்து போய்விட்டது"

என்று, எழுதிப்பார்த்து, திருப்தியடையும் 'செல்வர்கள்' இருக்கிறார்களே நம் நாட்டில், அவர்கள் அந்தக் காட்சியைக் கண்டிருக்கவேண்டும்.

(12-ம் பக்கம் பார்க்க)

பொதுச் செயலாளர் செய்திகள்

லால்குடியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆற்றிய சொற்பொழிவின்போது, விடுத்த செய்திகள்:—

நம்முடைய கொள்கைகள் நாட்டு மக்களின் இதயங்களிலெல்லாம், குடியேறவேண்டும். மாநாட்டுக்கு வந்து, கடந்த இருதினங்களாக நீங்கள் கேட்ட விஷயங்களை, பட்டி தொட்டிகளிலெல்லாம். நீங்கள்பரப்பவேண்டும். கட்டுப்பாடு நிரம்பியவர்களாக கழகத் தோழர்களாகிய நீங்கள் நடந்துகொண்டீர்கள். மழை பெய்தபோதும் கலங்காமல், இருந்த இடத்தைவிட்டு நகராமல் இருக்கிறீர்கள். இந்த மன உறுதிக்கு எது, காரணம்? கழகத்தின்பால் நீங்கள் கொண்டிருக்கும் பற்றும், கொள்கை உறுதியும் தவிர வேறென்ன?—இந்த உறுதி, நாட்டு மக்களுக்கேற்பட்டுவிட்டால் நம்முடைய பணி எளிதாகிவிடும். இந்த வேலைதான், இன்று நம்முடைய முக்கியமான பணியாகும். சிதறிக் கிடக்கும் சக்திகளை ஒன்று திரட்டவேண்டும். இதில்தான், நாமெல்லோரும் கவனம் செலுத்த வேண்டும். கட்டுப்பாடு நிரம்பிய கோட்டையாக நம் கழகம் விளங்க வேண்டும். சக்தியும், வலிவும் பெற்றுவிட்டால், எதையும் சாதிக்கலாம்!

*

நமது கழகத்தின் வளர்ச்சியைக் கண்கூடாகப்பார்க்கிறோம். பந்தல், போதவில்லை — அவ்வளவு, மக்கள் கூட்டம். எவ்வளவு பெரிய பந்தல், இது! மாநாட்டுக்கு முதல்நாள் பந்தலைப்பற்றி என்னிடம் மாநாட்டு நிர்வாகிகள் கூறியபோது 'இவ்வளவு பெரிய பந்தலா?' என்று கேட்டேன். இப்போது காண்கிறேன், இந்தப் பந்தலும்போதாமல் மக்கள் கூடியிருப்பதை. இவ்வளவு ஆர்வமும், ஆசையும்நமதுகழகத்தின்மீது ஏற்பட்டிருப்பதைக் காண யாருக்குத் தான் மகிழ்ச்சி, ஏற்படாது? இத்தகைய நிலைமைக்கு எது காரணம்—நமது கொள்கைகள்; வளர்த்துக்கட்டிக்காக்கும் நம்முடைய தொண்டு.

இது வளரவேண்டும்—வளர்ந்துவிட்டால், நினைத்ததைச் சாதிக்க முடியும்! எடுத்ததை முடிக்க முடியும்!

*

நம்முடைய சக்தியை அறியாதவனல்ல, நான். நம்முடைய சக்தி, சிதறாமல்—ஒன்று திரட்டப்படவேண்டும். நாம் கூறும் வார்த்தைகளுக்குமக்களிடத்தில், நல்லமதிப்பு வளர்ந்திருக்கிறது. அதற்கு முற்றும் அருகதையுள்ளவர்களாக, நம்மிடம், கட்டுப்பாடும், கடமைப் பொறுப்பும் அதிகமாகவேண்டும். கைத்தறித் துணிக்காக ஒருநாள் நடத்தினோம். லட்சக்கணக்கில், தேங்கிக்கிடந்த, கைத்தறித்துணிகள் விற்பனையாயின. நாம், கைத்தறியாளர் ஆதரவுநாள் நடத்திய பின்பு, ஏராளமான கைத்தறித் துணிகள் விற்பனையாகி வருவதாக சர்க்காரின் புள்ளிவிபரம் கூறுகிறது. மக்களிடம் இத்தகைய ஆர்வம் வளர்ந்ததற்கு, நாம்தானே காரணம். நாட்டின் நலிவைத் தீர்க்க, இதுபோன்ற நல் முயற்சிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

*

டால்மியாபுரம் பெயர் மாற்றும் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது. இந்தப்பெயர் தமிழ் நாட்டின் அவமானச் சின்னமாக விளங்குகிறது. இதனை மாற்றப் போராட்டம் நடத்தியே தீருவோம். இந்தப் போராட்டத்துக்குத் தமிழ்நாட்டு மக்கள் ஆதரவளிப்பார்களென்ற நம்பிக்கை எனக்குண்டு. இந்தப் போராட்டம் துவக்கப்படுமென, இந்தப் பெயரை மாற்றியமைக்கவேண்டுமென்று, ஏனைய அரசியல் கட்சிகளும், பொது ஸ்தாபனங்களும் தீர்மானம் நிறைவேற்றி ஆதரவளிப்பார்களென எதிர்பார்க்கிறேன். தனிப்பட்டோர் தத்தமது சக்தியானுசாரம் — முடிந்தால் தந்திமூலமோ, அல்லது கார்டுமூலமோ, இந்தப் பெயரை மாற்றவேண்டுமென்று பண்டித நேருவுக்குத் தமது கருத்தை எழுதி அனுப்ப வேண்டும். ஆங்காங்குள்ளோர், மக்களிடம் கையெழுத்து வாங்கியும் அனுப்பலாம். தமிழ்நாட்டை ஏளனம் செய்வதுபோலிருக்கும் இப்பெயரை மாற்ற எல்லா முற்போக்குக் கட்சிகளும் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேதின விழாவும்— நமது கடமையும்

[அரங்கண்ணல்]

மா வீரன் மறைந்ததாலேற்பட்ட கண்ணீரைத்துடைத்துக் கொண்டு, தன்வழியே நடந்து போய்க்கொண்டிருக்கிறது, ரஷ்யா.

தீட்டிய திட்டங்களை நிறைவேற்றியவண்ணம், பூரி பு நடைபோட்டுச் சென்று கொண்டிருக்கிறது, செஞ்சீனு.

புது வாழ்வு பெற்ற இந்த இரு பூமிகளையும் பார்த்து, பாட்டாளி உலகம், புதுமுறுக்குப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி உலகின் புது வேகம் காணும், ஆதிபத்ய உலகம் அஞ்சுகிறது. ஆதிபத்ய உலகின் அதிபதியான அமெரிக்கா, இன்ப பூமிகளாக விளங்கும் ரஷ்யா மீதும் செஞ்சீனு மீதும், ஆத்திர உணர்ச்சியை வீசிவருகிறது.

இத்தகைய சூழ்நிலையில், உலகப் பாட்டாளி மக்கள், மே முதல் நாளை சிறந்த முறையில் கொண்டாடுகிறார்கள்,

மே, முதல் நாள்!—நான்கு தொழிலாளத்தோழர்களின் இரத்தத்தைக் கண்டு உலகத் தொழிலாள மக்கள் துவங்கிய இந்த விடுதலை நாள், கடந்த 67 ஆண்டு காலமாக, உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

இருளடைந்து போன கண்களிலே ஓர் புது ஒளி! சோகம் நிரம்பிய அவன் முகத்திலே, ஓர் ஆனந்தம்! 'உழைப்பவனும் மனிதன்தான் அவனும் வாழத்தான் பிறந்தான்; எனும் உண்மையை அவன் உள்ளத்தில் உணர்த்தும் விழா நாளாக, இத்தினம், உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

உலகப்பாட்டாளி மக்கள், எதிரே தெரிகின்ற இன்ப எதிர் காலத்தை நோக்கி, ஆர்வத்தோடு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றனர். காய்ந்து உலர்ந்துபோன, அவர்கள் கண்களிலே இன்று ஓர் புத்தொளியைக்காண்கிறோம். புன்சிரிப்பு தவழும் முகத்தோடு, 'புது உலகு, காண்போம்' என்று, முழக்கமிடுகிறார்கள்.

இந்த முழக்கம், உலகமெங்கும் கேட்கிறது. ஐசுவரிய நாட்டைப் போற்றப்படும் அமெரிக்காவிலிருந்து, ஏழ்மையில் மிதக்கும் இந்திய உபகண்டம் வரை எங்கும் கேட்கிறது.

வானமளாவும் மாடமாளிகைகள்! வசீகரமான வாழ்வு!—உலகின், ஒவ்வொரு இடத்திலும், மிகச் சிலரால் அனுபவிக்கப்படுகிறது.

ஓட்டைக்குடிசை! ஒட்டியுலர்ந்த வாழ்வு!—உலகின், ஒவ்வொரு பகுதியிலுமுள்ள, மிகப் பலரால் நடத்தப்படுகிறது.

இந்த மிகப்பலர், தேய்ந்து திண்டாடும் போது, சுந்தரமான மாளிகையில், அத்தரும் பன்னீரும் தெளித்த அழகுக்கட்டிலில் "அழகி நீயிருக்க—அருகே நானிருக்க, ஆனந்த கீதம்பாடலாம், கண்ணே!" என்று கொஞ்சி மகிழும் கோமான்கள், குதூகல வாழ்வு நடத்திக் கொண்டிருக்கின்றனர். உலக மக்களில் இவ்வித இன்ப வாழ்வில் திளைத்திருப்போர் தொகை சுமார் 30 சத விகிதமெனலாம். மீதி, 70 சத விகித மக்களும் ஏழ்மைக்கு ஆட்பட்டு,ஏங்கித்தவிப்போர்தான்,

அண்மையில் உலக மக்களின் நிலை குறித்து, பேரறிஞர் ஒருவர், எழுதியிருந்த கட்டுரையொன்றைக் கண்டேன்—அவர் கூறுகிறார்:

உலக மக்களில் எழுதவும் படிக்கவும் அறியாதவர்கள் தொகை, பாதிக்குமேலிருக்கிறது.

20%க்கும் குறைவான உணவுடன் வாழ்க்கையை நடத்துவோர், 60-சத விகிதத்துக்கு மேலிருக்கிறார்கள்.

வாழ்க்கையை நடத்தத் தினசரி தவிப்போர், பாதிக்குமேலிருக்கிறார்கள்.

இந்த விபரத்தை, எவரும் மறுத்திட முடியாது. உலகில் பெரும் பாதிபேர், அவர்கள் இங்கிலாந்திலிருந்தாலும் சரி இலங்கையிலிருந்தாலும் சரி, ஆபிரிகாவிலிருந்தாலும் சரி, அமெரிக்காவிலிருந்தாலும் சரி, இத்தகைய அவதிக்கு ஆளாகிவருகிறார்கள்.

உலகில் ஒருபக்கம் மேடு! மற்றோர் பக்கம் பள்ளம்!!

இந்தப் பள்ளத்தில் கிடப்போர்தான் பாட்டாளி மக்கள் — உலகத்தை உருவாக்கும், பெரும்பான்மையான ஜனத்திரள், இது.

இந்தப் பள்ளம், ஆங்காங்கும் நீடித்துக் கிடப்பதற்குள்ள காரணம், ஏழ்மையாகும். (Problem of Poverty)

இந்த ஏழ்மை, எங்கேயிருந்து முளைத்தது? ஈசன், இட்ட கட்டளையாலா! விதியாலா!!—'ஆம்' என்பர், மத குருமார்கள்.

ஆனால் ஆராய்ச்சி வல்லுநர் கூறும் காரணம் வேறு—அது: "தனிப்பட்டோர் வசம் செல்வம் குவிந்துகிடப்பதால், ஒரு பக்கம் ஏழ்மைப் படுகுழி மூடப்படாமல் கிடக்கிறது" என்பதாகும்.

இந்த ஏழ்மைப் படுகுழியினைத் தூர்க்க எவரும் முன்வருவதில்லை. பசிகாரன், ஆசைக் கண்களோடு பணக்காரனை நோக்குகிறான். பசி, வெறியை தூண்டுகிறது. உரிமை முழக்கம் செய்கிறான்!

இந்த உரிமை முழக்கம், உலகெங்கும் கேட்கிறது.

மலேயா, இந்தோசீனு, போன்ற இடங்களில் 'அந்நிய ஏகாதிபத்யம் ஒழிக!' எனும் குரலில் கேட்கிறது. கடந்த மேதினவிழாவின்போது, இந்தக் குரல், பாரசீகம், எகிப்து முதலிய இடங்களில் ஒலித்தது. இப்போது அங்கிருந்த ஆங்கிலேயன் வெளியேறிவிட்டான்.

அந்நிய ஏகாதிபத்யமிருப்பதாலேயே ஏழ்மைப் பள்ளம் இருக்கிறது எனும் தேசீய உணர்ச்சியின் காரணமாக, பாட்டாளி மக்கள் இந்த முழக்கம் செய்கிறார்கள்.

ஆனால், அந்நிய ஆதிக்கமில்லாத இடங்களிலோ, அங்கு வாழும் முதலாளிகளின்மீது, இந்த ஆத்திர முழக்கம் எதிரொலிக்கிறது.

இந்திய உபகண்டத்தில், பர்மாவில், இன்னும் பல இடங்களில் இதனைக்காண்கிறோம். இந்த முழக்கம் அதிகமாவதைக் காணும், மாளிகைவாசிகள், பற்பலபெயர்களைச் சூட்டி ஏழ்மையில் திளைப்போரைத் துப்பாக்கி முன் நிறுத்தி வருகிறார்கள். அவர்கள் சூட்டிவரும் பெயர்களில், சில:—கிளர்ச்சிக்காரர்கள், பயங்கரவாதிகள், பிடாரிகள் என்பதாகும். இந்தப் பிடாரிகளும், பயங்கரவாதிகளும், உருவானதற்குக் காரணம் என்னவென்பதை, இந்த ஆதிக்கக்காரர்கள் சிந்திப்பதில்லை—அலட்சியமாகக் கருதுகிறார்கள்.

உலகை ஆட்டிப் படைக்கும் இந்த அடிப்படைப் பிரச்னையை, ஆத்திரத்தோடு, கவனிக்கிறது, அமெரிக்கா.

ஆனால், அனுதாபத்தோடு, கவனிக்கிறது ரஷ்யா.

ரஷ்யா அனுதாபம் காட்டுவதைக் கண்டு, அதன் மீது கோபப்பார்வையை வீசுகிறது, அமெரிக்கா.

அமெரிக்க முகாம்! ரஷ்யமுகாம்!! —இந்தப் போட்டி வளர்ந்து நிற்கும், இந்த நேரத்திலே, உலகத்துப் பாட்டாளி மக்கள் மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

*

உலகிலுள்ளபாட்டாளிமக்களின் பொதுப் பிரச்னை, 'நல்வாழ்வு' வாழவேண்டும் என்பதாகும்.

இந்தப் பிரச்னை, ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வோர் வகையில் உருவாகியிருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் உருவாகியிருக்கும் பாட்டாளி மக்களின் கோரிக்கையும், ஆசிய கண்டத்தில் உருவாகும் முழக்கமும், ஒரே நோக்கத்தைத்தான் கொண்டிருக்கின்றனவென்றாலும், அளவிலும் வகையிலும், சிறிது மாறுபட்டிருக்கின்றன.

மேற்கத்திய நாடுகள், இயந்திர சாதனங்களால் கொழிக்கின்றன.

கீழ்த்தேசங்களோ, இயந்திர வளம் பெற்றவை அல்ல.

அங்கேயிருக்கும் தொழிலாளர்களின் முக்கிய நோக்கம், ஆட்சிப் பொறுப்பிலிடம் வேண்டும், சுதந்திரங்கள் வேண்டும் என்பதாகும்.

அந்த உரிமைகளோடு, வாழ்க்கையின் முக்கியத் தேவையான உணவுக்கும், கீழ்த்தேசங்களிலிருப்போர், போராடுகிறார்கள்.

இதனால், மேலைநாட்டுப் பாட்டாளி மக்களுக்கிருக்கும், உணவுத் தேவை, பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதென்பதல்ல.

அங்கே, அதுவும் ஓர் பிரச்னை. இங்கே, அதுதான் பிரச்னை.

இதனை விளக்கி, 1952 மார்ச் மாத 'இந்து' இதழில் பீடர்பூன் எனும் பேரறிஞர், சிறந்தோர் கட்டுரைதீட்டியிருந்தார்—'Urgent Need for Industrialising' எனும் தலைப்பில்.

முன்னேற்றமடையாத பகுதிகள் என்று ஆசியா, மத்தியகிழக்கு, ஆபிரிகா, லதீன் அமெரிக்கா முதலிய பாகங்கள் உலக வல்லுநரால் குறிக்கப்படுகின்றன.

உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் மொத்தம் 46% மக்கள், முன்னேற்றமடையாத இந்தப் பகுதியில் இருக்கிறார்கள். இதிலும், அதிக ஏழ்மைக்கு ஆளாகியிருப்போரின் தொகை, ஆசியக் கண்டத்தில்தான் இருக்கிறது.

இந்த முன்னேற்றமடையாத பகுதிகளின் இன்றையமுக்கிய உடனடிப் பிரச்னை, உணவுதானென்று அப்பேரறிஞர், எழுதுகிறார்.

இந்தஉணவுப்பிரச்னை, யாருக்கு? உல்லாச மாளிகையில் வாழ்பவனுக்கு, அல்ல! உலர்ந்து வெலியும் உழைப்பாளிக்கு!!

இந்தப் பிரச்னை, இந்தப் பகுதிகளில், பேருருக்கொண்டிருப்பதாலேயே, அதிருப்தியும் கிளர்ச்சியும் வளர்வதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் எழுதுகிறார்: — "லட்சக் கணக்கானோர் பட்டினியால் பாத விக்கும்போது, அமைதி எப்படி யேற்படமுடியும்? இந்தப் பிராந் தியங்களின்பொருளாதாரநிலைவளர வேண்டுமேயானால், தொழில் வளர்ச்சி மிக மிக முக்கியம். ஏனெ னில் விவசாயத்தை நம்பிவாழும் நாடுகளில் மக்கள் தொகை, வர வரப் பெருகிக்கொண்டேபோகி றது. அந்தளவுக்கு ஏழ்மையும் விரிந்துகொண்டேபோகிறது. இந்த ஜனப் பெருக்கத்தின் விளைவால், வேலையில்லாத் திண்டாட்டம், உரு வாகிக்கொண்டு வருகிறது. வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால், புதிய நிலங் கள், சாகுபடியாக வேண்டும் அதோடு, தொழிலபிவிருத்தியும் ஏற்படவேண்டும்-அதிகமாகிக்கிடக் கும், விவசாயத் தொழிலாளர் களுக்கு மற்றொரு துறையாக. இது ஏற்படாவிடில் வாழ்க்கை மிகத் தொல்லையாகிவிடும். ஆலைகள்மூலம் உற்பத்தியாகும்பொருள்களை,உலக மார்க்கெட்டில் கொடுத்து உணவை யும் இதரத் தேவைகளையும் பெற் றுக்கொள்ளலாம்"

*

"தொழிலபிவிருத்தி வேண்டும்" என்று ஒரே வரியில் கூறிவிட்டார் ஆனால்,அதனைஎங்ஙனம் செய்வது பணம் வேண்டாமோ! அதனுல் தான் அமெரிக்காவின் உதவியை நாங்கள், நாடுகிறோம்—நீங்களெல் லாம் சீறுகிறீர்களே!", என்று காங் கிரஸ் தலைவர்கள், கூறமுன்வரலாம்

அவர்களுக்குச் செஞ்சீனுவைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சற்றேறக்குறைய இந்திய உப கண்டத்தைப்போல் எல்லா வகை யிலும்.ஏழ்மைப் படுகுழியில் கிடந்த பூமிதான், அது.

இன்று பூஞ்சோலையாகிறது அமெரிக்க உதவிப்பெற்று? அல்ல அல்ல!! தன்னுடைய வளங்களை வைத்து, சொந்த மூளையை உ யோகித்து. ஆனால், இங்கேயிரு

மன்றம்

1–5–53 இதழ் வெளிவந்துவிட்டது

விலை அணு 4

நிர்வாகி, 'மன்றம்'
26, நைனியப்பன் தெரு
மண்ணடி, சென்னை-1

இரு புது வெளியீடுகள்

—::—

கலைஞர் மு. கருணாநிதி
தீட்டிய
பரப்பிரம்மம் ரூ. 1
[நாடக நூல்]

திரு. அரங்கண்ணல்
தீட்டிய
உடைந்த ஆசை ரூ. 1
[சிந்தனைச் சித்திரம்]

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி

பவரோ, இரண்டையும் கவனிப்பதில்லை! அமெரிக்காவை அண்ணாந்து பார்க்கின்றனர்!!

இந்தியாவின் ஆலை உற்பத்தியை சிறுநாடு ஜப்பானுடன் ஒப்பிட்டால், விசித்திரமாயிருக்கும்.

இன்றிருக்கும் ஜப்பானின் தொழில் வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதென்றால், இந்திய உபகண்டத்துக்கு 90 ஆண்டுகள் பிடிக்குமாம்! சிறுநாடு ஜப்பான்—அதன் தொழில் வளர்ச்சியை நாம் அடைய 90 ஆண்டுகள்!!

இத்தகைய மீளாப் படுகுழியில், இந்திய உபகண்டம் கிடக்கிறது. ஏழ்மையிருக்குமிடத்திலே பசியிருக்கும். பசி இருக்குமிடத்திலே அறியாமை குடியிருக்கும்; வேலையிலாத் திண்டாட்டம் கோலோச்சும். இவை தீர, ஆலை வளர்ச்சி வேண்டும்.

அமெரிக்க பூமியில் ஆலையில் பாடுபடும் தொழிலாளர்களின் தொகை சுமார் 140 லட்சமாம்.

இந்தியாவில் ஆலையில் உழைக்கும் தொழிலாளரின் தொகை 15 லட்சம்தான்.

அமெரிக்காவின் மக்கள் தொகை 14 கோடி! இந்தியாவிலோ, 34 கோடி!!

இது எதனைக் காட்டுகிறது—வாழப் பிறந்த மனித உலகில், வாழ்வதற்குத் தேவையான வசதிகளை உழைத்துப் பெறவும் வசதியில்லை. உழைக்க இடமில்லை! வேலையில்லாத் திண்டாட்டம் வளருகிறது!!

இந்த அளவுக்கு, கீழ்த் திசை நாடுகளில் ஏழ்மைப் பள்ளம் விரிந்து கிடப்பதால, வேதனையும் தொல்லையும் வளர்ந்து கிடக்கிறது.

வாழப் பிறந்த மனிதன், உழைத்து வாழவும் இடமின்றி தேய்கிறான். இந்த முக்கியமான பிரச்னையை, மேதின விழா நாளில், நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உலகம்—அதில், ஆசியா—அங்கே இந்தியா—என்று, பிரித்துப் பார்க்கும்போது, நாம் வாழும் திராவிடத்தின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

திராவிடம், விவசாயத்தைத் தவிர வேறெந்தத் தொழிலையும் பெற்றிருக்கும் பிரதேசமல்ல.

வடக்கிலிருக்குமளவுக்கு, ஆலை வளர்ச்சிகூட இங்கே கிடையாது.

அவ்விதமாயின், சிறு நாடு ஜப்பானைப்போல செல்வத்தில் சிறந்து விளங்க நமக்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்குமோ?

*

மாவீரர்களாம், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கருத்துக்கள், மேதின விழாவில, ஆங்காங்கு பேசப்பட்டிருக்கும்.

தொழிலாளர்களின் குறைகள் களையவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கும்.

புரட்சி வாழ்க! என்று ஆர்வத்தோடு கொண்டாடிவிட்டு, வீரர் லெனினின் கருத்துக்களை முழக்கிவிட்டு, மாவீரர் ஸ்டாலின் வரலாற்றைக்கூறி விட்டு, வீடுதிரும்பி சோவியத் நாட்டின் சோபிதங்களைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்து விட்டால், மேதினம் மாரியம்மன் பண்டிகைபோல ஒரு விழாவாகுமே யொழிய, உண்மையான பலனைத் தராது.

இந்த நாளில் உலகத்தையும், நம்முடைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

மனிதன் உழைக்கவும் வழியின்றி திகைத்து நிற்கிறான், திராவிடத்தில்—இதனை, எண்ணிப்பாருங்கள்.

உழைக்க வழியின்றி, உண்ண வழியின்றி அவன் உலர்வதுமட்டுமல்ல, மற்றோர் 'முதலையினின்றும்' அவன் விடுதலை பெறவேண்டியவனாயிருக்கிறான்.

முன்னேற்ற மடைந்த நாடுகளிலிருக்கும் பாட்டாளி மக்கள் அரசியல் விடுதலை விரும்புகிறார்கள்,

முன்னேற்றமடையாத நாடுகளிலிருப்போர், உணவுப்பிரச்னையால், அவதியடைகின்றனர்.

திராவிடத்திலிருப்போரோ, இந்த இரண்டு லட்சியங்களைமட்டுமல்ல, தமது வாழ்க்கையைச் சீர்குலைக்கும் சமுதாய பள்ளங்களிலிருந்தும் விடுதலை பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

இந்த நிலையை, எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம், நம்மனோரை.

உலகில், மிகமிகத்தாழ்ந்த நிலையில், அதிகச்சுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது, திராவிடபூமி.

இந்தச்சுமைகள், எவையெவை யென்பதை, நன்றாக அறிவோம், நாம்.

அவைகளை இறக்கிவிட்டு, இன்ப கீதம் பாடும் ரஷ்யா, செஞ்சீனா போல, நம்மரும் திராவிடம் ஆவதெப்போது ?

இதனை நெஞ்சில் நினைத்துப் பாருங்கள்! பயங்கரமான பள்ளத்தில், கிடக்கிறோம் நாம்.

என்று, நமக்கு, இன்பவாழ்வு!—பாட்டாளி மக்களே, பசிக்கு உணவும், செய்ய வேலையும் இல்லாது திண்டாடும் 'வாழப்பிறந்தோரே, இதனைச்சிந்தித்துப் பாருங்கள். சிந்தனையில் தேக்குங்கள் என்று இந்த மே நாளில் கேட்டுக்கொள்கிறோம்.

★

மே தின வரலாறு

பட்டப்பகல்—பிணமாகத் தொங்கினர் நால்வர், தூக்குமேடையில்!

கூட கோபுரங்கள் மாடமாளிகைகள் நிறைந்த சிகாகோ நகரிலே நடந்த இச்சம்பவம்—உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது! உலகம் முழுதும் இச்சம்பவம் கண்டு வேதனைப்பட்ட அந்த நேரத்தில் வீணை மீட்டின, அமெரிக்க அரசாங்கமும் அங்குள்ள முதலாளித்துவமும்!

அவர்கள் திருடர்களல்ல, கொலைகாரர்களல்ல. கொடுஞ்செயல் எதுவும் செய்யவில்லை—எனினும் தூக்குமேடையில் தொங்கினர், பிணமாக.

1887 நவம்பர் 11ந் தேதி—உலக வரலாற்றில் ஒரு ஏட்டை இரத்தமயமாக்கியது—உழைப்போர் இதயத்தில் உணர்ச்சியையும் 'உழைக்கிறாய் உத்தமா, மாடு போல! ஆனால், உழைப்பின் பயன் என்ன! சாவு! அதோ பார், உங்களிலே நால்வர் பிணமாகத் தொங்குகின்றனர் உங்களிலே அவர்களும் நால்வர்—அவர்களுக்குத் தூக்கு!' என்ற ஆத்திரமயமான நினைவுகளைத் தூண்டிவிட்டது.

"15-மணி நேர வேலை! 12-மணி நேரம் இயந்திரத்துக்கடியிலே! முடியாது, நாங்களும் மனிதர்கள்தான்!" இந்த வீர முழக்கம அமெரிக்காவிலே எழும்பியது. "எட்டு மணி நேரம்தான் வேலை செய்வோம்!" என்ற இக்கிளர்ச்சி 1878-ல் அமெரிக்காவில் துவங்கியது, முதல் முறையாக.

பாட்டாளிகள் உரிமை முழக்கம் கண்ட 'பணம் பெருத்தான்கள்' கேலி பேசினர்—கொக்கரிப்புகண்டு எக்களித்தனர்! விளைவு—புடல் வீசியது ஒரு நாள்! பல்லாயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் சிகாகோ நகரில் கூடிமுழக்கமிட்டனர் 'எட்டு மணி நேரம் வேலை செய்வோம்' என்பதாக! ஆர்ப்பாட்டங்கள் பொதுக் கூட்டங்கள் நாடெங்கும் நிகழ்ந்தன. சிகாகோ நகர் அமெரிக்கத்தொழிலாளர்களின் வெற்றி நிலையமாகத் திகழ்ந்தது.

1886 மே மாதம் முதல் நாள்—சிகாகோநகரில் இடியோசையெனத் தொழிலாளர் முழக்கம் எதிரொலித்தது. ஊர்வலம் ஆர்ப்பாட்டம், வெற்றி முழக்கம் பெருமிதமான அளவில் நடைபெற்றது.

தூங்கிக் கிடந்த புலியின் உறுமல் கண்ட முதலாளித்துவமும் அரசாங்கமும் பயந்தன! ஏழைகள் எரிமலையாகிவிட்டனர் என்பது கண்ட அவர்கள், நடுநடுங்கினர், ஆத்திரமடைந்தனர். சிங்கத்தின் குகையில் சுண்டெலிகளின் தொல்லையா? என்று கோபத்தோடு பேசினர். வேண்டாம் போய்விடுங்கள்—வேதனையை வரவழைக்காதீர்கள் என்று இதோபதேசம் செய்தனர்!

மிரட்டல் வார்த்தை, பயமுறுத்தல், இதோபதேசம்—எதுவும் பலிக்கவில்லை! "எட்டு மணி நேரம் வேலை கொடு" என்று லட்சோபலட்சம் பாட்டாளிகளின் இதயகீதம் எங்கும் எதிரொலித்தது! அஞ்சிய ஆதிக்கபுரி போலிசுக்கு உத்திரவிட்டது!

துப்பாக்கிகள் முழங்கின—பாட்டாளிகளின் படையிலே பிணங்கள்—நூற்றுக்கணக்கில்! மே மாதம் முதல் நாள் இரத்தம், சிகாகோவின் வீதிகளில் உறைந்து கிடந்தது!

சர்க்காரின் கொடுங்கோன்மை, உழைப்பாளரின் பிணங்கள்—ஒதுங்கிக் கிடந்தோர் உள்ளத்தையும் கொந்தளிக்கச் செய்தது! 'உரிமை நமது, மூச்சு! உலுத்தர் தலை போச்சு!' என்று வீரப் பண் பாடிக்கொண்டு திரண்டனர்-வெற்றி முரசு ஒலித்தனர்—சிகாகோ கண்டிராத மாபெரும் பொதுக்கூட்டம் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கக் கூடியது, மேமாதம் நான்காம்தேதி! பாட்டாளிகளின் கிளர்ச்சி வளர்பிறையாவதைக் கண்ட அரசாங்கம் கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் படைகளை அணிவகுத்து அனுப்பியது!

திடீரென ஒரு வெடி குண்டு!—அணிவகுத்து நின்ற போலீஸ் கூட்டத்திலே விழுந்தது.... ...ஆத்திரமடைந்த யாரோ 'அதிகாரபபுலி' களின் மீது குண்டு வீசிவிட்டனர்!

கூட்டம் கலைக்கப்பட்டது, கோபாவேசத்துடன். நாடெங்கும் கைதுகள் நிகழ்ந்தன. புலன்விசாரணை நடைபெற்றது. நால்வர், நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். தூக்குமேடை கொண்டுசெல்லப்பட்டனர்—பிணமாகத் தொங்கவிடப்பட்டனர். 1887 நவம்பர் 11ந் தேதி பலி!

1889—பாரிஸ் நகரில் சர்வதேச தொழிலாளர்களின்மாநாடுகூடியது. உழைப்போர் வாழ வழிவகைகள் காணக் கூடிய அம்மாநாட்டில் 'சிகாகோ சம்பவம்' பற்றிப் பேசப்பட்டது. 'எட்டுமணி நேர வேலை' என்ற அடிப்படைக் கிளர்ச்சிக்காக, அமெரிக்க நகரில் இரத்தமயமாக்கிய மே தினம் குறித்து ஆலோசித்தனர். அதனை—உலகப் பாட்டாளி மக்களின் விழிப்பு நாள் என்று அறிவித்தனர்!

"உரிமைக் கோரிக்கையை உயிர் போயினும் விடோம்!" என்பதைக் காட்ட ஒவ்வொருஆண்டு மேமாதம் முதல் நாளை கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்தனர். அன்று முதல் 'மேதினம்' உழைப்போரின் உரிமை முழக்கத் தினமாயிற்று!

✲



லால்குடி, சமூக சீர்திருத்த மாநாட்டுத் தலைவர்

பூவாளூர் அ. பொன்னம்பலனார்

பூந்தோட்டம் காண்கிறேன்!

[திருச்சி மாவட்டக் கழகத் தலைவரும், சட்டசபை உறுப்பினருமான தோழர் பி. பி. கே. ராஜா சிதம்பரம் அவர்கள் தி. மு. க. மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின், பகுதி]

"இன்று, இங்கு கூடியிருக்கும் இவ்வளவு பெரிய மாநாட்டைக் கண்டு, நான் பூரிப்படைகிறேன். சுமார் 25 ஆண்டுகளுக்குமுன், கள்ளியும் முள்ளியும் நிரம்பிய காட்டை, என் போன்றோர் செப்பனிடப் பாடுபட்டோம். இன்று, அந்தப் பணி, பூந்தோட்டமாக உருப்பெற்றிருக்கிறது! திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ந்திருக்கிறது!—இதைக் காணும் போது, என் உள்ளம் பூரிப்படைகிறது.

இதே லால்குடியிலே, சுமார் 25 ஆண்டுகளுக்குமுன்பு, நானும், நண்பர் பொன்னம்பலனாருமாகச் சேர்ந்து, முதல் பிராமணரல்லாதார் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டினோம். அப்போதிருந்த நிலைமை வேறு: காடும் மேடும் நிரம்பிய கரம்பு நிலம் அன்று! இப்போதோ பூந்தோட்டமாகக் காட்சி அளிக்கிறது!!

நாம், திராவிட நாடு அடைய வேண்டுமெனப் பாடுபட்டு வருகிறோம். எதற்காக, நாம், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம்.

நம்முடைய நாடு, வடநாட்டால் சுரண்டப்படுகிறது. இந்தச் சுரண்டலுக்கான வழிவகைகளை, சுயராஜ்யமெனும் பெயரால், வடநாட்டார் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். புது இந்திய அரசியலமைப்பு, இந்த அடிப்படையில்தான் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியலமைப்பை, நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இது, நமக்கு விருப்பமானது அல்ல. ஏனெனில், நம்மைபற்றித் தெரியாதோர், இந்த அரசியலமைப்பை வகுத்தனர். நம்மைப்பற்றிமட்டுமல்ல, அரசியல் என்றாலே இன்னதென்று அறியாதோர்தான், நம்முடைய பிரதிநிதிகளாகச் சென்றிருந்தனர். இதனால் நம்மைக் கட்டுப்படுத்தும், அரசியலமைப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த அமைப்பில, கட்டுண்டு கிடப்பதால் என்ன லாபம்?' 'மாகாணம்' என்றிருந்ததை, 'ராஜ்யம்' என்றாக்கினரே யொழிய, மாகாணத்துக்கு எந்த நன்மைகள் செய்திருக்கின்றனர்? சுயராஜ்யம் என்கிற போர்வையில், வடநாட்டு முதலாளிகள் நம்மைச் சுரண்ட ஓர் தந்திரம் செய்து கொண்டனர். 'சுயராஜ்யம்! சுயராஜ்யம்!' என்று காங்கிரஸ்காரர்களுக்குப் பண உதவி செய்து, டாடாவும், டால்மியாவும், பிர்லாவும், சுயராஜ்ய கோஷம் எழுப்பினர். நாம் ஏமாந்தோம். நம்மைச் சுரண்டுவதற்கு நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டார்கள்.

இந்தச் சுரண்டுதலை எதிர்த்து, நாம் சுகவாழ்வு பெற, திராவிட நாடு பெறவேண்டும்." என்றும், இன்னும் பல முக்கிய விஷயங்களையும், தெளிவாக எடுத்துக் கூறினார்.

★

திராவிடநாடு

காஞ்சி] 3—5—53 [ஞாயிறு

அந்தப் 'பலம்!'

★

தரங்கம்பாடியிலே, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜ், காங்கிரஸ் கட்சிக்குள்ள, "பலம்" குறித்து, குறிப்பிட்டாராம்.

நாட்டிலுள்ள மற்ற எதிர்க்கட்சிகளைக் காட்டிலும், அதிக "பலம்" வாய்ந்தது காங்கிரஸ்கட்சிதான் என்று வெளியிட்டாராம்.

வெளியிட்ட இடம், பொதுக் கூட்டமல்ல. காங்கிரஸ் தோழர்கள், நிரம்பிய கமிட்டிக் கூட்டம்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களுக்கு, தலைவர், கட்சிக்கிருக்கும் "பலம்" குறித்து விளக்கம் தந்திருக்கிறார்.

கட்சியின் பலத்தை, கமிட்டி உறுப்பினர்கள், குறைவாக மதிப்பிட்டனர்போலும் — சந்தேக நிவர்த்திசெய்ய முனைந்திருக்கிறார்.

மக்கள், காங்கிரசின் 'பலம்' குறித்து ஐயப்படுவதில், அர்த்தமிருக்கிறது. அதனை, தலைவர் நிவர்த்திசெய்ய விளக்கமளிப்பதும், நியாயம்.

ஆனால், காமராஜர், கமிட்டிக் கூட்டத்தில், 'பலத்தை' விவரித்திருக்கிறார்.

காங்கிரஸ் கமிட்டி உறுப்பினத் தோழர்களுக்காக அனுதாபப் படுகிறோம், காமராஜர் விளக்கு மளவுக்கு கட்சியின்மீது, அவர்கள் கண்ணோட்டம் செலுத்திவருவதற்காக.

காங்கிரஸ் கட்சிக்குள்ள 'பலம்', உண்மையில் வேறெந்தக் கட்சிக்கும் கிடையாது. காமராஜர், கூறுவதை, நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்கிறோம்.

இந்திய உபகண்டத்தில் வாழும் எந்த அரசியல் கட்சிக்கும் அந்தளவு, பலம் இல்லை. இல்லாதது மட்டுமல்ல, இருக்கவும் முடியாது.

காங்கிரஸ் கட்சி!—மற்றக் கட்சிகளைப்போல, சாதாரணமானதா? அல்ல! அல்ல!!

அதோ, மந்திரிகள் மிரள்கிறார்கள்.

பிரபுக்கள், வட்டமிடுகிறார்கள்.

பணம் வருகிறது! போகிறது!!!

தபாராக நிற்கிறார்கள், அதிகார அம்புகள்.

பராக்குக் கூறும் பத்திரிகைகள் ஏராளம்.

உலகையே விலை பேசக்கூடிய பணமும், ஜகத்தை மயக்கும் செய்தி இதழ்களும் பெற்றிருக்கும் சர்க்காரின், கட்சி, அது.

எப்படி, பலம், இல்லாமற் போகும்? துப்பாக்கிகள் இருக்கின்றன! துணைசெய்ய அதிகாரம் இருக்கிறது. 144 வீச, வசதி உண்டு. 'தேனீ' யாகக் கொட்டலாம் 'நெல்லிக் குப்பம்' நடத்தலாம்- அந்தளவுக்கு நெஞ்சுறுதி கொள்ளலாம். அத்தகைய வசதி உண்டு—பலம் உண்டு.

எவரும் மறுப்பதற்கில்லை! இவர்களுக்கு மட்டுமென்ன, ஆட்சியில் வெள்ளைக்காரன் அமர்ந்திருந்த போது, இன்று நண்பர் காமராஜர் குறிப்பிடுகிறாரே, 'அந்தப்பலம்' தம்மிடம் இருப்பதாக அவனும்தான் கர்ச்சித்தான்.

ஆனால், நிலைமை என்னவாயிற்று! இதனை, சிந்திக்க ஓய்வில்லாததால், அவர் மறந்துவிட்டார் போலும்— அன்றன்றுட ஆட்சி மாற்ற திட்டங்களை ஆலோசிக்கவே அவருக்கு நேரம் போதவில்லையாமே!—இதெல்லாம், எப்படி கவனத்திலிருக்க முடியும்?

சோர்ந்துபோன தோழர்களுக்கு, காங்கிரஸ் கட்சிக்கிருக்கும் 'பலத்தை' சூசகமாகச் சுட்டிக் காட்டுகிறார், காமராஜர்.

இவ்வளவு பலம், இருக்கிறது— இதனை அறிந்து கொள்வீர்—அஞ்சாதீர், என்று அபயம் தருவது போல.

'அஞ்சேல்!'—என்று புது இரத்தம் பாய்ச்ச முயன்ற, தோழர், காங்கிரஸ் கட்சிக்குள்ள பலத்தை விளக்கியதோடு போய்விடவில்லை. அதனைத் தொடர்ந்து அருமையான விளக்கம் ஒன்றும், தந்திருக்கிறார்.

இவ்வளவு பலம் இருக்கிறது! இதேபோல, வேற்றுமையும் இருக்கிறது!!—காமராஜர் கூறியது, இது. பலமிருக்குமளவு வேற்றுமையும் இருக்கிறது, என்று கூறினாராம். உடனே, சிரிப்பொலி எழும்பிற்றும். கமிட்டிக் கூட்டத்தில், 'தினமணி'—தெரிவிக்கிறது, இவ்விதம்.

'பலம்' அரைவீசை என்றால், 'வேற்றுமை'யும் அரைவீசையிருக்கிறதாம்.

காங்கிரஸ் கட்சிக்கு, நினைத்ததைச் சாதிக்கக்கூடிய அளவுக்கு 'பலம்' இருக்கிறது—அதேபோல, அவைகளைக் கெடுத்துவிடக்கூடிய 'வேற்றுமை'யும் இருக்கிறது. இரண்டும் சம எடையில்! எவ்விதம், காரியமாற்ற முடியும்?

ஒரு மைல் ஓடியதும், ஒரு 'ஷாக்' அடித்து, புறப்பட்ட இடத்தில் கொண்டுவந்து நிறுத்தினால், முன்னேறிச் செல்லமுடியாதது தான்.

ஆனால், 'வேற்றுமை' குறித்து அவர் கூறியதும், கமிட்டித் தோழர்கள் சிரித்தனராமே, அது ஏன்?

தலைவரோ, தனது சகாக்களுக்கு கட்சியின் 'பலத்தை' விளக்குகிறார். பலமிருக்கிறது! ஆனால் 'வேற்றுமைகள்தான் கெடுத்துவிடுகின்றன!'— என்று.

தலைவர், 'வேற்றுமைகளை'க் குறித்து விளக்கியதும், கமிட்டி உறுப்பினர்கள், நகைத்தனராம்.

என்ன அர்த்தம், இதற்கு?— "வேற்றுமை, எங்களிடம், எப்படி முளைத்தது தலைவா? எல்லாம் தங்கள் கைங்கர்யம்தானே!" என்பது தானே, அந்தச் சிரிப்பின் பொருளாக இருக்கமுடியும்.

பலம், மலைபோல்! வேற்றுமையும் மலைபோல்!!

இந்த வேற்றுமை ஒழிந்தால் தான், நாட்டில் காங்கிரஸ் செல்வாக்குபெற முடியுமென்று விளக்கியிருக்கிறார், அவர்.

உண்மை. வேற்றுமைகள் முளைத்து வளர்ந்தால், எதையும் சாதிக்க முடியாது தான்.

'திருப்பரங்குன்றத்து' மூலம், வேற்றுமை வித்து முளைத்தெழும்ப காரணமாயிருந்த காமராஜர், இன்று அதனைக்கண்டிக்கிறார். அவரது எதிரிகளாம் ஆச்சாரியார் 'குரூப்'பும் வேற்றுமைகளை மறந்து பணியாற்ற வேண்டுமென, தெரிவிக்கிறார்.

மகிழ்ச்சி! இந்த மனோபாவம், விருதுநகர் வீரருக்கு ஏற்பட்டமைக்காக.

அந்த வேற்றுமைகளை ஒழிக்க, எல்லோரும் பழையபடி தீவிரமாக வேலை செய்யவேண்டும்,—என்றும் கூறுகிறார். அதற்கு, அவர் காட்டிடும் மூலதனம்தான், காங்கிரஸ் கட்சிக்கிருக்கும் "பலம்."

காமராஜரின் வேண்டுகோளை மதித்து, காங்கிரஸ் தோழர்கள் 'பழையபடி வேலை' செய்யட்டும்— செய்யாமல் போகட்டும். அவர்களையும், அவர்கள் பழகப்போகும் பொதுமக்களையும் பொறுத்த விஷயம், அது,

ஆனால், அவர்கள் பழையபடி வேலை செய்ய, காமராஜர் காட்டுகிறாரே, பலம், அதைத்தான் நாம் சிந்திக்க விரும்புகிறோம்.

மக்களிடையில் அவர்களுக்கிருந்த 'பலத்தை,' கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்துவிட்டது.

ஆகவே, அவர்காட்டும் பலமெல்லாம், நாம் தலைப்பிலே தெரிவித்ததாகத்தானிருக்கமுடியும்.

ஆள் உண்டு! அதிகாரம் இருக்கிறது! பத்திரிகைகள் ஏராளம்! பணவசதி உண்டு!—எல்லாம் சரி, இந்தப் பலம் போதுமா? அரசியல் கட்சியை வளர்க்கும் பலமா, இது?

அன்பர் காமராஜர், 'பலம்' என்று இன்று எதெதைக் கருதுகிறாரோ, இது அத்தனையையும் பெற்றிருந்தான், வெள்ளைக்காரன். பணமிருந்தது அவனிடம்! பிரபுக்கள் வட்டமிட்டனர், அவனைச் சுற்றி! 'ராஜா' முத்தையாக்கள் வலம் வந்தனர்! இன்று எவரெவர் காங்கிரசுக்குப் 'பலம்' உண்டாக்கியிருப்பதாகக் காமராஜர் கருதுகிறாரோ, அந்த மிட்டாமிராசுகளெல்லாம் அவனிடம் குவிந்திருந்தன.

ஆனால், என்னவாயிற்று? அவன் பெற்றிருந்த பலம், மக்கள் சக்தி முன் பொடிப்பொடியாய்ப் போயிற்று.

அந்த மக்கள் சக்தி, அன்று காங்கிரசில் இருந்தது.

இன்றோ! காமராஜர் கூறும் 'பலம்' இருக்கிறது, காங்கிரசில். மக்கள் சக்தியோ, முற்போக்குக் கட்சிகளிடம் இருக்கிறது.

அதிகாரமும் ஆளம்பும், பணவசதியும் சட்டத்துரைத்தனமும், அங்கே.

இங்கேயோ, மக்கள் சக்தி இருக்கிறது.

"பொய்! பொய்!!—மக்கள் சக்தி, மாற்றாரிடம் போய்விடவில்லை. எம்மிடம் தான்," என்று கூறமுடியாது காமராஜர்.

புலிபுகுந்த இடத்தில், மானுக்கு வேலையிருக்கமுடியாது.

காங்கிரசில், காமராஜர் குறிப்பிடும், 'பலம்' புகுந்திருக்கும்போது எவ்விதம் மக்கள் சக்தி, இருக்க முடியும்?

காங்கிரஸ், புலிகள் உலவும் கூடாக மட்டுமல்ல. பாலைவனமாகவும் ஆகிவிட்டது.

பாலைவனத்தில், மான்களுக்கென்னவேலை? அதுவும், பாலைவனத்திலிருந்து அடிக்கடி எழும்பும் புயல்காற்று, உயிருக்கே உலைவைக்கும்போது.

'சுயராஜ்யம்' — எனும் சோபிதமான சொல்லை வீசிக்கொண்டு, மக்கள் சக்தியைப் பெறமுடிந்தது.

இன்று! எதை, வீசிக்கொண்டு, அதனைப் பெறமுடியும், அவர்களால்.

வேதனைகளைத்தான் வீசமுடியும் —வீசிக்கொண்டுமிருக்கிறார்கள்.

எனினும் காமராஜர், காங்கிரஸ் தோழர்களின் கண்களை, 'பலம்' எனும் திரையால்; மூடமுயல்கிறார்.

அவர், 'பலத்தை'க் காட்டுகிறார்.

ஆனால், அந்தப் பலத்தை முறியடித்து வெற்றிபெறக் கூடிய ஜீவ சக்தியாம் மக்கள் சக்தியோ, நம் போன்றோரிடம் குவிந்து வருகிறது.

அதனை தெள்ளத்தெளிய, கடந்த சனி ஞாயிறுகளில் நடந்து முடிந்த திருச்சி மாவட்ட மாநாடுகள், எடுத்துக் காட்டுகின்றன.

காங்கிரஸ் தலைவர், தமக்கேற்பட்டிருக்கும் புதுப் பலத்தைக் காட்டிப் 'பூரிக்கட்டும் — கவலையில்லை, நமக்கு.

மக்களிடம் வளர்ந்துவரும் இலட்சிய சக்தியை, வளர்க்கும் பணியில், நாம் ஈடுபட்டு வருகோம்.

கானலை, நீரென நம்பச் சொல்கிறார், காமராஜர்! — அதனை காங்கிரஸ் இளைஞர்உலகுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

அவர் காட்டும் 'பலம்' ஒரு மண் கூடு. அதனை நம்பிக் கெடாதீர்— மக்களின் சக்தியைப் பெறும் மார்க்கத்தில் செல்லுவீரென எடுத்துக் கூற விரும்புகிறோம்.

காங்கிரஸ் கூண்டில், இனி மக்கள் சக்தி சேராது — ஏனெனில், அங்கே, அவர் குறிப்பிடும், 'பலம்' அதிகமாகி, உயிரைக் குடிக்குமளவுக்கு வளர்ந்துவிட்டது.

ஆகவே, அருமைத் தேசியத் தோழர்காள்! கண்ணை மறைக்கும் திரையை விலக்கி, இலட்சியப் பாதை நோக்கி வாரீர்! அந்தப் பாதையில் பெருமித நடைபோடும் மக்களைக் கண்டீர், லால்குடி மாநாடுகளில்.

இவ்வித 'மக்கள் சக்தி' எங்ஙனம் குவிந்தது.

காமராஜர் குறிப்பிடும், 'பலத்தால்' அல்ல—அவர் காங்கிரசுக்கிருப்பதாகக் கூறும் பலத்தில், ஆயிரத்தில் ஒரு பங்குகூட எமக்கில்லை. நாங்கள், பராரிகள்! எனினும் எங்ஙனம், மக்கள் சக்தி, ஆதரவு காட்டுகிறது. மேனி மினுக்கால் அல்ல, காமராஜர் காட்டும் 'பலத்தால' அல்ல—கொள்கை உரத்தால், நல்லெண்ணத்தால், தியாகச் சிந்தனையால்.

இதனைச் சிந்தித்துப் பார்ப்பீர்! தீயவழி, மூடுவீர்!! என்று, தேசிய இளைஞர்களை, அழைக்கிறோம்.

P. T. C.

Become an Engineer, or a Technician and earn more than Rs. 200 a month by joining one of our following courses:-

1. Civil Engineering
2. Mechanical Enginecrig
3. Electrical Engineering
4. Radio Engineering
5. Wireless Telegraphy

Courses begin in June and run for 9 months.

ARTS COURSE

Success guaranteed to every student for S. S. L. C. Matric, Inter, B. A, B. Sc., Hons, B. Com.

Tution: Oral and Postal

Hostel and Laboratpry attached

Special accomodation for Ladies.

Office:
29, Nandhi koil St.,
Teppakulam, Trichy.

P. V. PARTHASARATHI,
PRINCIPAL.

'ரகுபதி ராகவ ராஜாராம்' பாடினால் பயனளிக்குமா?

சாதிவெறி தவிர, பெற்றதென்ன, நாம்?

புராணமும் மதமும்-பொல்லாத சாக்கடை

காலம் மாறுகிறது-கருத்தும் மாறட்டும்

அறிவியக்க வீரர் பொன்னம்பலனர் அறைகூவல்

"அறிவுடைய மனித சமூகத்தில் சாதிச் சண்டைகள் ஏன்? மதச்சண்டைகள் ஏன்? சமயப் பூசல்கள் ஏன்? ஆண்டான் அடிமைகள் ஏன்?"— என்று லால்குடியில் 25—4—53 அன்று நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில் தலைமை வகித்த பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் வீர முழக்கம் செய்தார்கள்.

"நமது கருத்துக்களையாரும் கண்மூடித்தனமாகப் பறை சாற்றும்படி நாம் கூறுவதில்லை—பகுத்தறிவுடைய மனிதன்—சிந்தனை சக்தியுள்ள மனிதன்— நம்கருத்துக்களை நன்ருகச்சிந்தித்துப் பின் பற்றினல் மட்டும் போதும் என்றும் நாம் கூறிவருகிறேம்.

ஆனல், வைதீகர்களோ—சாதி, மதம், சாத்திர வழிகள் மூலம் ஆதிக்கம்செலுத்தவிரும்புவோரோ, வர்ணச்சிரமத்திற்கும் புராண இதிகாசங்களுக்கும் உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் கடவுளுக்கும் ஆபத்து என்று கூச்சலிடுகிருர்கள். பொது மக்களிடம், 'மக்களைப் படைத்துக்காப்பாற்றும் சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு ஆபத்து! மதம், சமயம், புராண இதிகாசங்கட்கு ஆபத்து!', என்று கூச்சலிடுகிருர்கள். மனிதன் பஞ்சத்தால் நலிந்து மடிந்து சாகிருன். மனிதனை மனிதன் அன்பு உணர்ச்சியில் காப்பாற்றும் அறிவு உணர்ச்சியைக் காணேம். மனிதன் கடவுளைக் காப்பாற்றத் துடிக்கிருன். கடவுளுக்கு கோயில்கட்டி தினசரி நான்குகாலம் ஆறு காலம் பூஜை நைவேத்தியங்கள் செய்கிருன். பால், தேன், பன்னீர், பழங்களைக் கொண்டு அபிஷேகம் செய்கிருன்—உற்சவங்கள் தேர் திருவிழாக்கள் நடத்திப் புராணக் கதைகளைக் கூறி மக்கள் பொருளை, அறிவை, நேரத்தை வீணுக்குகிருர்கள். இது தான், மோட்சத்தைக் காணும் வழி! அங்கே, மக்களை அழைத்துச் செல்வதே வாழ்க்கை லட்சியம்! — என்று கருதுகிருர்கள், கடவுள் பக்தர்கள்.

"இதுவாமனிதசமூகத்தொண்டு? அன்பே வடிவமான கடவுளை, அறிவே உருவமான பரம்பொருளை, எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ஈசனை, எல்லா உயிர்கட்கும் தாய் தந்தை போன்ற உலக நாயகனை, உருவம்—நிறம்—குணம்—செயல்—கற்பிக்கப்படாத மெய்ப்பொருளுக்கு உருவம் கற்பித்து, மனைவி மக்களைக் கற்பித்து, தேவலோகம், மோட்சலோகம் நரகலோகம் கற்பித்து, மக்களைமூடநம்பிக்கையுடன் கண் மூடித்தனமாகப் பின்பற்றும்படி செய்வதும், குருக்கள், பட்டர், தீட்சதர்களைக்கொண்டு, தரகு வேலை செய்து காணிக்கை பெறுவதும் கடவுள் பெயரால் வயிறுவளர்ப்பதும் விதி—கர்மம்என்று கூறி மக்களை வஞ்சிப்பதும் தான் பக்தியா? மனிதருக்குச் செய்யும் சமூகத் தொண்டா?" என்று கேட்டார், அவர், மேலும் தொடர்ந்து, பேசியவது:—

த

பஞ்சம், பட்டினி, தொழில் இல்லை, டசி, பசி, குடிக்கத் தண்ணீரும் கிடையாது. பட்டினியால் மக்கள் மடிகிருர்கள், தற்கொலைபுரிந்து கொள்ளவும் துணிகிருர்கள். பெற்ற குழந்தைகளைக் காப்பாற்ற வகையின்றி எட்டணுவுக்கும் ஆறணுவுக்கும் விற்கிருர்கள். சிலர் மனம் துணிந்து பெற்ற குழந்தைகளைக் கொன்றுவிட்டு தானும் மரக்கிளைகளில் தூக்கிட்டுக்கொண்டு மடிகிருர்கள் என்பன போன்ற வேதனை தரும், செய்திகளையேகேட்கிறேம். இவைகட்கெல்லாம் ஒரே பதில் கடவுளை மறந்தீர்கள்? மழை இல்லை? பஜகோவிந்தம் பாடுங்கள், ராம நாமத்தைப் பாடுங்கள் வறுமை நீங்கும் பஞ்சம் நீங்கும், பசி அகலும், என்று உபதேசிக்கிருர் உயர்தர வக்கீல், சட்டக் கல்வி பயின்ற முதலமைச்சர் அன்பர் ஆச்சாரியார். வைஸ்ராய் பதவியிலிருந்தவர், மாதம் பல்லாயிரக் கணக்கான (வெண்பொற் காசுகளை) ரூபாய்களைப் பெற்று ஆடம்பர வாழ்வில் அமர்ந்திருப்பவர்—அரசியல் அமைச்சர் போதனை செய்கிருர் நாட்டு மக்கட்கு. நீங்கள் என்ன கருதுவீர்கள்?......

சாதி ஒழிக்கப்பட வேண்டும், உயர்வு தாழ்வு அகற்றப்படவேண்டும் மனிதனை மனிதன் சாமி என்று அழைக்கக்கூடாது. சாதிப் பட்டம் ஒழிக்கப்படவேண்டும். சமயகுறிகள், சாதி அடையாளங்கள், அகற்றி மனித சமத்துவத்துடன் அன்புடன், அறிவுடன், நெறியுடன் பழகி நேசத்துடன் வாழ வேண்டுமென்றுநாம்கூறி வருகிறேம் புரோகிதம் ஒழிந்து சடங்குகள் ஒழிந்து, மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிந்து, வீணுக ஆடம்பரச் செலவுகள் செய்வதை அகற்றி, அறிவு வழி நின்று காதல் திருமணம், கலப்பு மணம், விதவை மணம் செய்து கொள்ளுதலே சாதி ஒழிப்புக்கு ஏற்ற வழி என்று கூறுகிறேம். நம் கருததுக்களை சமூகக் கட்டுப்பாடுகள் சாதிக் கட்டுப்பாடுகள் என்ற பெயரால் எதிர்த்தார்கள் கொதித்தார்கள். அநீதி என்ருர்கள். சமூகத் துரோகம் என்ருர்கள். விதவைக்கு மறுமணமா? தேவதாசிக்கு மறுமணமா? நம் சாதியை விட்டு வேறு சாதியில் திருமணமா? என்றெல்லாம் கூப்பாடு போட்டார்கள். வைதீகக் கூச்சலை, வர்ணச்சிரமக் கூச்சலை, மதவாதிகள் கூச்சலை, சாதி பித்தர்கள் கூச்சலை நம் பொருட்படுத்தாமல், சமூகப் புரட்சிகள் செய்யத் தொடங்கினேம். சமூக சீர்திருத்த நோக்கம் புரட்சிகரமானதாகக் கருதப்பட்ட காலத்தில், எதிர்ப்புக்கு அஞ்சாமல் நம் அருமைத் தோழர்கள் அருணகிரி—சுந்தரி, ராமசுப்பிரமணியம்—லீலாவதி, சிதம்பரம்—ரெங்கம்மாள், முருகப்பா—மரகதவல்லி, தேனப்பன் — ஆதிலட்சுமி, ஆண்டாள்—சதாசிவம்; வை. சு. சண்முகம்—மஞ்சுளாபாய்; லகாஷ்—நம்பிக்கை மேரி, குஞ்சிதம்—குருசாமி, காந்தம்மாள்—சுந்தரவடிவேல், சந்தன மேரி—சாமிநாதன், அழகப்பா — புவனும்பாள், சாமிசிதம்பரனர்—சிவகாமி, கண்ணபிரான்—ருக்மணி, தமையந்தி—சிதம்பம், அன்ன பூரணி — ரத்தனசபாபதி, வாசுதேவன் — பவானிபாய், கோவிந்தசாமி — ரத்தினபாய், வைரத்தம்மாள்—சாமி, இளமுருகு — பொற்செல்வி, நாராயணசாமி — ரெங்கநாயகி, போன்றவர்கள் காதல் திருமணம் கலப்பு மணம், விதவை மணம் செய்து கொண்டார்கள் பிறகு, எண்ணற்ற இதுபோன்ற சமூகப் புரட்சிகரமான திருமணங்கள், சைவ மெய்யன்பர்கள் வீட்டிலும், வைதீக வர்ணச்சிரமக்காரர்கள் வீட்டிலும், தேசபக்தர்கள் வீட்டிலும் இனிது நடைபெற்றன. யாவரும் இன்று சுகமாகவாழ்ந்து வருகின்ருர்கள். நன்மக்களையும் பெற்றுச் சுகமாக வாழ்கிருர்கள். தீங்குகள் எதுவும் நேர்ந்துவிடவில்லை.

மக்கள் சமூக நலம் கருதி, முன்னேற்றம் கருதி, கூறும் கருத்துக்கள் ஒரு சமயம் எதிர்க்கப் பட்டாலும் எதிர்க்கப் பட்ட மக்கள் காலத்திலேயே வரவேற்கப்படுவதையும் சட்டமூலம்செயல் படுத்தப்படுவதையும் தினசரி வாழ்க்கையில் நாம் காண்கிறேம். முன்பு. ஒருமனிதன் ஆசைக்கொரு

8-ம் பக்கம் பார்க்க)

சமுதாய சீர்திருத்த மாநாடு, ஏன்?

அம்பில் தர்மலிங்கம் வரவேற்புரை

முன்பெல்லாம் நமது மாநாடுகளிலே சமுதாயத்தையும்; அரசியலையும் ஒன்ருேடொன்று பிணைத்துப் பேசிவந்த நாம்; இப்பொழுது இவை இரண்டையும் பிரித்துப் பேசவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம். பிரித்து பேசுவது என்ருல் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணனவை என்பதற்காக அல்ல, இரண்டின் தேவைகளும் நிலைமைகளும்- தனித்துப் பேசவேண்டிய அளவு வளர்ந்துள்ள காரணத்தால், சமுதாய சீர்திருத்தமும், அரசியல் சீர்திருத்தமும் ஒன்றைவிட்டு ஒன்ருக இல்லாமல் ஏககாலத்தில் இரண்டும் செய்யப்படவேண்டியவை என்று சீனத்தலைவன் மாசே-துங் கூறியிருப்பதை இப்போது படித்து திருந்திக்கொண்டவர்கள் போல் அல்லாமல், இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அந்தப் பணியைச் செய்துவருபவர்கள் நாம். எனவே வளர்ந்துள்ள நிலைக்கும்—தேவைக்கும் தகுந்தாற்போல், அதற்கு காலத்தைமட்டும் தனித்தனியே பிரித்து அதன் காரண காரியங்களை ஆராய்கின்ருேம். அம்முறையில் நமது திருச்சி தி.மு.கழக மாநாட்டின் முதல் நாளாகிய இன்று சமுதாய சீர்திருத்த மாநாடு நடைபெறுகின்றது.

நமது நாட்டு மக்கள் சமுதாயம், மதம்—கடவுள் என்னும் இரும்புக் கரங்களின் பிடியில்சிக்கிச் சீரழிந்து வருகின்றது. தங்கள் வாழ்வுக்கும், வளத்திற்கும் சாதகமாக உபயோகிக்க உற்பத்தி செய்துகொண்ட கூட்டத்தார் பாமரரின் அறியாமையை முதலாக்கித் தங்கள் ஏமாற்று வித்தையை வழியாக்கி உயர்ந்து வாழ்கின்ருர்கள். உழைக்கும் கூட்டத்தார் உருக்குலைந்து வாடுகின்றனர். இந்து மதமும் — கடவுளும்தான் — அதை உறுதிப்படுத்தும் வேதங்களும் — சாஸ்திரங்களும்தான், நமது சமுதாயத்தில் நிலவி நின்றுவரும், ஆண்டான் — அடிமை, ஏழை — பணக்காரன், ஜாதியில் உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பேதங்களுக்கு மூல காரணங்கள்.

எனவே இந்தச் சமுதாயம் பேதமற்றசமுதாயமாகச்சீர்திருத்தப்பட வேண்டுமானல் வேதங்களுக்கு மூலகாரணங்களான மதங்களும், கடவுள்களும் தகர்த்தெறியப்பட வேண்டுமென்று நாம் கூறுகிறேம். இப்படி நாம் கூறும்போது ஆதிக்கத்தால் ஆனந்த வாழ்வு அனுபவித்து வருபவர்கள் நம்மீது ஆத்திரப்படுகின்றனர். அவர்கள் ஆத்திரம்கண்டு அஞ்சாமல் மக்களை வாழ்விப்பதற்காகச் சமுதாய சீர்திருத்தம் தேவை என்று கூறிய சீன அறிஞன் சன்யாட்சன் கிரேக்க மேதை சாக்கரடீஸ் நமது நாட்டு புத்தர்—திருவள்ளுவர் ஆகியோரின் அறவுரைகளை மக்கள்முன் வைத்து கடந்த இருபது ஆண்டுகளாக அவர்களைச் சிந்திக்கத் தூண்டிவருகின்றேம்.

நமது பணி, ஓரளவு சமுதாயத்திலுள்ள மக்களை விழிப்படையச் செய்துள்ளது. ஏன் என்று கேட்போர்—எந்த வேலை இனி நடைபெருது என்று எடுத்துக் கூறுவோர் தொகை இன்று நாட்டிலே பெருகியுள்ளது. இருந்தாலும் நம்மை ஏளனம் செய்வோரும் இருந்துகொண்டுதான் இருக்கின்ருர்கள். அதை நாம் லட்சியம் செய்யாமல் நமது பணியினை தொடர்ந்து செய்துகொண்டே போகிறேம்.

சமுதாயத்தை அடிமைப்படுத்த—சுரண்ட என்னென்ன சாதனங்களைச் சூழ்ச்சியினர்கள் கையாண்டார்களோ, அந்த சாதனங்களையே சமுதாயம் விழிப்படையச் செய்ய நமக்கு சாதகமாக்கிக்கொண்டுள்ளோம். கல்வி, இசை, நாடகம், சினிமா ஆகிய எல்லாத் துறைகளையும் நாம் கைப்பற்றியிருக்கின்ருேம். நாம் இல்லாத துறை—நமது கருத்து கொண்டோர் புகாத இடம் இல்லை என்பதைப் பெருமையோடு கூறிக்கொண்டால் அதில் தவறில்லை என்று நான் கருதுகின்றேன்.

நமது தொண்டால் நாட்டுக்கு ஓர் நல்ல நிலையும், சமுதாயத்திலே ஓர் புரட்சியும் ஏற்பட்டுள்ளது. நமதுவாதங்களுக்கு நேரிடையாகப் பதில்கூற வகையற்ருேர், பக்கவாட்டில் நின்று குத்த நினைக்கின்றனர். அதற்கு நாம் கவலைப்படவில்லை. எதிர்ப்பு எந்தப் பக்கம் இருந்து வந்தாலும் எதிரேற்கும் ஈரோட்டுப் பாசறையில் பயின்று காஞ்சியால் மெருகேறி வெளிவந்தவர்கள் நாம். எனவே, நமது பணியைத் தொடர்ந்து செய்வோம்.

அந்தப் பணி எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பதை இது போன்ற மாநாடுகளின்மூலம் நாம் அடிக்கடி கூடிப் பேசி முடிவு காண வேண்டும். அந்த முறைக்காகவே சமுதாய சீர்திருத்த மாநாடு நடைபெறுகின்றது.

✻

“டால்மியாபுரம்” பெயர் மாற்[illegible]திராவிட மக்களின் சிம்மநாதம்!

அருமை நம் திராவிடத்தில் ‘ஆதிக்[illegible]தலை’யின் பெயரா?

வாட்டிடும் வடவர் கும்பலுக்கு எச்சரிக்கை நட[illegible]கை

“தன்மானம் பெரிது; தயாராகுங்கள்”

தியாகத் தீயில் குளிக்க, திருச்சியின் அழைப்பு

“தென்னாட்டு வளப்பத்தில் ஒன்றான சிமிண்டைத் தனது வளத்துக்காகப் பயன்படுத்திச் சுரண்டி வாழும் வடநாட்டு டால்மியாவானவர், சிமிண்ட் விளையும் இடமான கல்லக்குடிக்கு வடநாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாக ‘டால்மியாபுரம்’’ என்ற பெயரை வைத்திருப்பதானது திராவிட மக்களை அவமானம் செய்வதாகும். அதை எடுத்துக்கூறி டால்மியாபுரம் என்ற பெயரை நீக்கிவிட்டு அந்த ஊரின் பெயராகிய “கல்லக்குடி’’ என்பதை வைக்கவேண்டுமென கிளர்ச்சி துவக்கவும் தேவைப்பட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடவும் இம்மாநாடு தீர்மானிப்பதுடன் இதனை நடத்திச் செல்ல திருச்சி மாவட்டக் கமிட்டி ஒரு தனிக் குழுவை அமைப்பதென்றும், குழுவுக்குத் தலைவராக தோழர் மு. கருணாநிதியை இருக்கக் கேட்டுக் கொள்வதென்றும் இம்மாநாடு தீர்மானித்திருக்கிறது.’’

போர் முழக்கம் செய்தனர், திருச்சி மாநாட்டில் கூடிய திராவிட மறவர்கள்! வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் சுரண்டிச் செல்லும் வடவர் ஆதிக்கத்தின் பிடியை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற முழக்கம், ஒவ்வொருடைய இதயத்தினின்றும் எதிரொலித்தது! செல்வம் கொழிக்கிறது, திராவிடம்—அதனைத்தேடி எடுப்பதும் திராவிட மக்கள்—ஆனால், அதனால் லாபம் பெறுவது வடநாட்டு, டால்மியாலாபம் பெறுவது மட்டுமா? செல்வத்தைத் தரும் இடத்துக்கே தன்னுடைய பெயரையும் பொறித்துக் கொண்டு நம்மை ஏளனக் கண்களால் பார்க்கிறது, வடநாட்டு முதலை!—‘இந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டிரோம்’ என்று அடிக்கடி திருச்சி மாவட்டக் கழகத்தினர், குமுறி வந்ததை, நாடு அறியும். அந்தக்குமுறலின் விளைவாகவே மேலே தரப்பட்டுள்ள தீர்மானம், லால்குடி மாநாட்டின் 2-வது தீர்மானமாக நிறை வேற்றப் பட்டது.

பொதுச் செயலாளர் வாழ்த்து

—::—

“பெயரில் என்ன இருக்கிறது?—என்று விட்டுவிடக் கூடியதல்ல, இந்தப் போராட்டம். திராவிட சமுதாயத்தின் மானப் பிரச்னையாகும். வடவரின் ஆதிக்கத்துக்கு, நாம் தரும் எச்சரிக்கையாகும். இந்த முடிவைச் செய்த மாநாட்டினரை நான் பாராட்டுகிறேன். மக்களின் உள்ளக் குமுறலை அறியக்கூடிய சர்க்காராகயிருந்தால், ஒரே வரியில் பெயரை மாற்றச் செய்து விடலாம். ஆனால், இன்றுள்ள சர்க்கார் அத்தகைய விவேகம் நிரம்பிய முடிவை எடுக்கக் கூடியவர்களல்ல. அதனால்தான், போராட்டம் துவக்கப்பட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் போகும் திருச்சி தீரர்களை வாழ்த்துகிறேன். அமைதிக்குபங்கம் விளையாமல், இந்த அறப்போர் நடத்தப்பட வேண்டும் அதற்கான பொறுப்புள்ள தம்பி கருணாநிதி யென்பதை அறிவேன், நான். சாத்வீகமான முறையில் துவக்கப்படும் தன்மானப் போராட்டத்துக்கு பட்டிதொட்டிகளிலெல்லாம் ஆதரவைத்திரட்டுங்கள். டில்லியினர், நம்மிடம்வளர்ந்திருக்கும் உரிமை உணர்ச்சியை அறியச் செய்யுங்கள்’’—என்று மாநாட்டில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அறிவித்தார்.

களம் நோக்கி, கருணாநிதி

“இத்தகைய வாய்ப்பைக் எனக்களித்த பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கும், திருச்சி மாவட்டத் தோழர்களுக்கும், என் நெஞ்சு கனிந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுச்செயலாளர் அவர்களை என் இதயத்தில் ஏந்தி, களம் நோக்கிச் செல்லப் புறப்பட்டு விட்டேன்!

களத்திலே, வடவரின் வெறி, நம் மீது பாயலாம். படுகாயம் விளைவிக்கலாம்—என்னைப் பலி கொள்ளலாம். நான் பலியாக நேர்ந்தால், என்னைத் தொடர்ந்து புறப்படும் வீரர் குழாம் தயாராகயிருக்கிறது! டால்மியாபுரம்—இந்தப்பெயர், என்னைச் சுட்டுப் பொசுக்குகிறது. ரயில்வே நிலையத்தைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம் அங்கே எழுதப்பட்டிருக்கும் இந்தப் பெயர், என் உள்ளத்தைக் கொதிப்படையச் செய்கிறது. செந்தமிழ் நாட்டில், வந்தவன் பெயரா? சுரண்டிக் கொழுப்பவன் பெயரால் ஓர் இடமா? கூடாது! கூடாது!! இந்தப் பெயரை மாற்றியமைப்போம்—மாற்றியமைத்தே தீருவோம், அறப்போர், அமைதியான முறையில் தான் நடைபெறும். ஆனால், அது சகிக்காமல், ஆட்சியாளர் அடக்குமுறைப் பாணங்களை வீசுவார்களென்றால் அதையும் ஏந்தத் தயார்! இரத்தம் சிந்தட்டும்—நமது குருதி கொட்டட்டும். கவலையில்லை! சிந்தும்இரத்தத்தைஎடுத்து, அதைக் கொண்டு ரயில்வே போர்டில் எழுதப்பட்டிருக்கும் ‘டால்மியாபுரம்’ எனும் பெயரை அழிப்போம்!’’—என்று போராட்டக் குழுத்தலைவரானதோழர் மு. கருணாநிதி, தன்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீர்மானங்கள்

லால்குடியில் நடைபெற்ற அரசியல் தி. மு. க. மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:

(1) நமது இயக்கத்தலைவரும் தன்மான இயக்கத்தின் நல்லதோர்

மாற்றியே தீருவோம்!

பழனியாண்டி எம் எல். ஏ.

“நான் டால்மியாவின் ஆலையிலே, உழைத்திருக்கிறேன். உழைத்து உழைத்து உருக்குலைந்து போகும் நமது மக்களை வஞ்சித்து, ஏராளமான செல்வத்தைச் சுரண்டிச் செல்கிறார் வடநாட்டு டால்மியா!—ஆலையிலே, ஆண்களும் பெண்களுமாக, நமது மக்கள் அவதிப்படுகிறார்கள். போதிய சம்பளமில்லை—வசதியில்லை. கேட்டால், வேலைபோய்விடுகிறது! சமீபத்தில் கூட 125-தொழிலாளர்களை நீக்கிவிட்டார்கள். இவ்விதம் சுரண்டிச் செல்கிறார், நமது செல்வத்தை! கல்லக்குடி, சிமெண்ட் உற்பத்திக்குச் சிறந்த இடம். மற்ற இடங்களில் கிடைப்பற்கு அரிதாயிருக்கிற ஜிப்ஸம் இங்கேதான் அபரிமிதமாகக் கிடைக்கிறது. ஆனால், நமக்குப் பயன்படவில்லை. இத்தகைய கொடுமை, ஏன் நீடிக்கவேண்டும்? இப்படிச் சுரண்டிச் செல்லும் ஆசாமியின் பெயர் ஏனிருக்கவேண்டும்? டால்மியாபுரம் பெயரை மாற்றவேண்டுமெனும் திட்டத்தை மனமார நான் வரவேற்கிறேன். இதற்கு, தொழிலாளர்களையும், என் தொகுதி மக்களையும் திரட்டித் தருவேன். சட்டசபையிலுள்ளோரிடமும், ஆதரவு பெறப் பாடுபடுவேன் இன்றைய சர்க்கார், மக்களின் நலன்களைப் பொருட்படுத்தவில்லை. ஏதோ, விளையாட்டு, வேடிக்கை யென்ற அளவிலேயே இருக்கிறார்கள். அண்மையில் டால்மியாபுரத்தில் சுமார் நூறு வீடுகள், தீப்பிடித்து எரிந்து போய்விட்டன. அத்தனையும் ஏழைகளின் வீடுகள்! வீடிழந்தோருக்கு சர்க்கார் சார்பில் ஏதாவது உதவி செய்யுங்கள்—என்று ராஜாஜியிடம் தெரிவித்தேன். “வீடு, ஏன் எரிந்தது. ஓடு போட்டிருக்கவேண்டும்!’’—என்று கேலியாகப் பதில் சொன்னாரே தவிர, ஏழை மக்களுக்கு உதவ முன்வரவில்லை. இத்தகைய சர்க்காரின் போக்கை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள தயாராயிருக்கிறேன்!’’—என்று டால்மியாபுரம் தொகுதி M. L. A. தோழர் பழனியாண்டி அவர்கள் முழக்கமிட்டார்.

தொண்டரும், ஏழைகளைப் படிக்க வைப்பதில் முன்னின்று உதவிய புரவலரும், மதுரை மாவட்டம் தந்த மாணிக்கமுமான ஊ. பு. அ. சௌந்தரபாண்டியனார் இயற்கையடைந்தமைகுறித்து இம்மாநாடு பெரிதும் வருந்துவதுடன் அன்னாருடைய குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. சாமி கைவல்யம், உலகமேதை ஸ்டாலின், சென்னை பாண்டியன், ஆகியவர்களின் ஈடு செய்ய முடியாத பிரிவு குறித்து வருந்துவதுடன் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(4) திருச்சி மாவட்டத்திலிருக்கும் புகளூர் வாய்க்காலில் தற்காலிகமாக இரண்டு ஆண்டுகளாக தண்ணீர் தட்டுதல் ஏற்பட்டுவிட்டபடியால், அவ்வட்டாரத்தில் பொருளாதாரமும், தொழிலாளர் நலனும் மிகவும் பாதிக்கப்படுவதால், சர்க்கார் புகளூர் வாய்க்காலை சேடர்பாளையம் ‘பெடரெகுலேட்டரில்’ இணைக்கும்படி இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(6) தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கிறித்தவர்களுக்கு (ஆதி திராவிட கிறித்தவர்கள்) இதுவரை அரசினர் அளித்துவந்த பள்ளிச் சம்பள சலுகையைத் தற்பொழுது நீக்கப்பட்டுவிட்டதை இம்மாநாடு கண்டிப்பதோடு, மீண்டும் பள்ளிச் சம்பளச் சலுகையை தாழ்த்தப்பட்ட சமூகத்தார்களுக்குக் கொடுத்து உதவும்படியும் இம்மாநாடு அரசினரை வற்புறுத்துகிறது.

(7) சென்னை அரசாங்கம், திருச்சி மாவட்ட விவசாயிகளைப் பல வருடங்களாகப் புன்செய் நிலங்களிலெல்லாம்—நன்செயாகச் சாகுபடி செய்ய வற்புறுத்திவிட்டு—திடீரென்று அதுவும் எவ்வித முன்னறிவிப்புமின்றிவழக்கம்போல புன்செய் நிலத்தை நன்செயாகச் சாகுபடி செய்தவர்களிடம் தண்டநீர்க் கூலி வசூலிப்பது மிக மிகப் பிற்போக்கான செய்கையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், தண்ட நீர்க் கூலியைத் தள்ளுபடி செய்யவும் இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

(8) நெசவாளர்களது நலம் பற்றிய சர்க்காரது அறிவிப்பும், அதை நிர்வகிக்கும் கூட்டுறவு அதிகாரிகளின் போக்கும் நேர்மாறாக இருப்பதால் நெசவாளர்கள் எவ்வகைப் பயனும் பெறாமல் அல்லலை அடைந்து வருவதால், சர்க்கார் தாம் போட்டிருக்கிற சட்டத்தை நேரிய முறையில் அமுல் நடத்தும்படி இம்மாநாடு தெரிவிப்பதுடன், நமது பொதுக்குழு தீர்மானப்படி திராவிட மக்களனைவரும் கைத்தறி ஆடைகளையே ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறது.

(9) நமது மாகாணத்தில் உணவு பற்றாக்குறையிருக்கும் போது கூட, லட்சக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் (நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ளவை) சாகுபடி செய்யப்படாமல் தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் இம்மாகாணத்திலேயே வாழுகின்ற மூன்றாவது இராணுவத்தினருக்கும், பிற்பட்ட சமூகத்தாருக்கும் விவ

[illegible]

கள் வரண்ட பிரதேசங்களாக இருக்கிறது. எனவே, இக்கிராமங்களுக்கு மேற்கே இரண்டு மைலிலிருக்கும் உய்யக்கொண்டான் வாய்க்காலை சோளமாதேவியிலிருந்து பிரித்து இந்த வரண்ட பிரதேசங்களைச் செழிக்கச் செய்யக் கேட்டுக்கொள்வதுடன், பெரம்பலூர் தாலுகாவையும், உடையார்பாளையம் தாலுகாவையும் பஞ்சப் பிரதேசம் எனப் பிரகடனம் செய்யும்படியும் இம்மாநாடு வேண்டுகிறது.

(14) திருச்சியில் சுமார் 10,000—க்கு மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் மிகவும் கேவலமான நிலைமையில் இருந்து வருகின்றனர். தொழிலாளர்களின் நியாயமானதும் சட்ட ரீதியானதுமான சலுகைகளை ரத்து செய்ய வேண்டுமெனவும், சர்க்கார் தனது சட்ட திட்டங்களை அமுல் நடத்த முடியாதபடி ஏமாற்றும் நோக்கத்துடனும், திருச்சி பீடிமுதலாளிகள் ஏற்கனவே இருந்த பாக்டரி முறையை ரத்து செய்யவேண்டுமென்ற சூழ்ச்சி எண்ணத்துடன் பிராஞ்சு முறையை அமுல் நடத்துகின்றனர். வீட்டு நெருக்கடி மிகுந்துள்ள நிலையில், தொழிலாளர்கள் பிராஞ்சு முறையில் தங்களது வீடுகளில் இவ்வேலையைச் செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவதால் பீடி இலை, இதர கழிவுப் பொருள்கள் தெருக்களிலும், சாக்கடை யோரங்களிலும் குவிந்து பொதுமக்களது சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கிறது. காற்று வசதி இல்லாத நெருக்கடியான இடங்களிலும், சாக்கடையோரங்களிலும் வேலை செய்வதால் தொழிலாளர்களுக்கும் பெரிய அளவில் சுகாதாரசீர் கேட்டை உண்டாக்குகிறது. எனவே பீடித்தொழிலாளர்கள் சட்ட ரீதியான சலுகைகளைப் பெறவும், பொது மக்களின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதற்காகவும் உடனடியாக, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அரசியலாரை இம்மாநாடு கோருகிறது.

பாக்டரி முறையில் நடத்தாத பீடிக்கம்பெனிகளின் லைசென்சுகளை ரத்து செய்யவேண்டும்.

(அ) பாக்டரிமுறையில் தொழில் நடத்துவோருக்கே, லைசென்சுகள் வழங்கப்படுதல் வேண்டும்,

(ஆ) குறைந்த பட்ச சம்பள சட்டத்தையும், இதர தொழிலாளர் நல உரிமைச் சட்டங்களையும் முதலாளிகள் அமுல் நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் சர்க்காரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும்.

✲

கவர்னருக்கேன் கொள்ளைச் சம்பளம்?

கிளர்ச்சி செய்வோம், வாரீர்!

முற்போக்குக் கட்சிகளுக்கு அன்பழைப்பு

ஆண்டு ஒன்றுக்கு 11 லட்சம் ரூபாய்!—ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் ஈராயிரம் அல்ல; பதினொரு லட்சங்கள்!!

பொது மக்களின் கஜானாவிலிருந்து, போய்க் கொண்டேயிருக்கிறது.

கடந்த ஆண்டைவிட இப்போது மேலும் ஒரு லட்சம், விரயமாக்கப்படுமாம். எதற்குத் தெரியுமா?—கவர்னரின் சம்பளம் என்கிற பெயரால்! இந்த அக்கிரமத்தை ஆதிமுதல், நாம் கண்டித்து வந்திருக்கிறோம். சட்ட சபையிலும் கடந்த ஓராண்டு காலமாக கண்டிக்கப்பட்டு வந்தது.

எனினும், கவர்னர் சம்பளத்தில் மேலும் ரூ 80 ஆயிரம் அதிகமாக்கும்படி, டில்லி, உத்தரவிட்டதாம்—ஆச்சாரியார் சர்க்கார் அதன்படி செய்திருக்கிறது.

பதினொரு லட்சங்கள்!—நினைத்தாலே, பயங்கரமாக இருக்கிறது.

ஒரு தனி நபருக்கு, மாதம் ஒன்றுக்கு சுமார் 90 ஆயிரம் ரூபாய், செலவுக்கு!!

இந்த அக்கிரமத்தை எத்தனை நாட்களுக்குத் தான் சகிப்பது?

ஏழைகள் நலிய, யாரோ ஒருவருக்கு, இவ்வளவு பணமா?

இந்தக்கொடுமையை நீக்க எல்லா முற்போக்குக்கட்சிகளையும், திருச்சி மாநாடு, அழைப்பு விடுக்கிறது.

அது நிறைவேற்றியிருக்கும் 13-வது தீர்மானம்:-

சர்க்காரின் தலைவர் என்ற பெயரால் சிருஷ்டித்த பதவியான கவர்னர் பதவிக்கென ஆண்டுதோறும் பத்துலட்சத்துக்கு மேற்பட்டவரிப் பணத்தை, வீணாக விரயம் செய்து வரும் போக்கை இம்மாநாடு மிக வன்மையாகக்கண்டிப்பதோடு, கவர்னரின் சம்பளத்தை உடனடியாகக் குறைத்தாக வேண்டும்என்ற கிளர்ச்சியை எல்லா முற்போக்குக் கட்சிகளும் துவக்க வேண்டுமென்று இம்மாநாடு அன்பழைப்பு விடத் தீர்மானிக்கிறது.

★

[illegible]ர் ஆட்சி—நிர்வாகத் திறமை அற்றது

[illegible]ா வளர்த்தது-வேதனைகள் அதிகமாயின

போக்கினை மாற்றிக்கொள்வாரா?

பொதுநலனுக்குப் பாடுபடுவாரா?

தி. மு. க.-வின் குமுறல்

படும் என்பதை ஆச்சாரியார் ஆட்சிக்கு எடுத்துக் காட்டுகிறது’’

*

எத்தனை நாட்களுக்குத்தான், பொறுத்திருப்பது? ஆச்சாரியாரை இந்திரன் என்றார்கள்! சந்திரன் என்றார்கள்! ‘கடவுளின் தூதர்’, என்று தன்னைத்தானே அவரும் கூறிக்கொண்டார்! பஜகோவிந்தம் பாடச் சொன்னார். பலன் என்ன? பட்டினி! பஞ்சம்! வேதனை! சாவுகள்!—இதுவா, ஒரு அரசாங்கத்தின் திறமைக்குச் சான்றுகள்.

இதனை எத்தனை முறை எடுத்துக் காட்டினாலும், ‘ஆண்டவன் செயல்!’ என்கிறாரே தவிர, அரசாங்கம் ஆவன செய்யும் என்று அன்பு மொழி கூறுவதில்லை.

இத்தகைய விசித்திரமான மனப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் அன்பர் ஆச்சாரியார். மேலோகத்தைவிட்டுச் சிறிது பூலோகத்தைப் பார்க்க வேண்டும்.

இதனை, எச்சரிப்பதுதான், திருச்சி விடுத்திருக்கும் இத்தீர்மானத்தின் நோக்கம்.

ஆட்சிப் பொறுப்பையேற்றவர், மக்களின் வரிப்பணத்தைக்கொண்டு நாட்டுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதைவிட்டு, ஆண்டவனை அழைப்பதும், பஜனைபாடச் சொல்வதுமென்றால், இந்த விசித்திரத்தை எப்படித்தான் சகிப்பது?

“ஏன் இப்படி செய்கிறீர்?’’—என்று கேட்டால், நாட்டின் நலிவுகளைத் தீர்க்க என்னாலான முயற்சிகளைச் செய்கிறேன்—ஆனால் பணமில்லாததால் படாதபாடு படுகிறேன்—டில்லியைக் கேட்டிருக்கிறேன்—டில்லி, அலட்சியம் செய்கிறது—என்று, வேதனையோடு விளக்கமளிக்கிறார்.

விளக்கமளிக்கிறாரேயொழிய டில்லியின் அலட்சியத்தை மாற்றி, வேண்டிய நிதியினைப் பெறும், மார்க்கம் எதுவும் கண்டாரில்லை. அப்போதைக்கப்போது, தன்மீது ஏற்படும் பழியினைக் குறைத்துக் கொள்ள, டில்லியை இழுக்கிறார். ஆனால், டில்லியின் போக்கில் மாற்றம் காண முயற்சிக்கவில்லை—அவரை, டில்லியின் நண்பர் என்றனர் தேசிய நண்பர்கள்—டில்லி, அவர் சொல்படி ஆடும் என்றனர்—பண்டிதரும் ராஜாஜியும் அத்யந்த நண்பர்கள் என்றனர்—ஆனால், அவரோ, இதுவரை, எவ்வித உதவியும் பெறவில்லை.

உதவி பெறக் கூடியவர், எவ்வித உதவியும் இதுவரை பெறவில்லையென்றால், டில்லி இவரது கோரிக்கையை அலட்சியம் செய்கிறதா அல்லது இவர், டில்லியின் கவனத்தைத் திருப்ப எவ்வித முயற்சியும் எடுக்கவில்லையா?—இதில், எது, காரணம்.

விளக்கப்பட வேண்டும்—இவரோ, டில்லியைக் குற்றம் சாட்டுகிறார்.

ஆச்சாரியாரின் கோரிக்கையை டில்லி அலட்சியம் செய்கிறதென்றால், அத்தகைய டில்லியை மிரட்டவோ, அதட்டவோ, அல்லது தந்திரமாகக் காரியத்தைச் சாதிக்கக் கூடிய திறமையோ அற்றவரா, ஆச்சாரியார்?

நாட்டில் பிணங்கள் விழுவதை அமைச்சர்களே, ஒப்புக் கொள்கிறார்கள். அந்தளவுக்கு வேதனை வளர்ந்திருக்கும் போது, ஆட்சியை நிர்வகிக்கும், முதலமைச்சர் உள்ளம் குமுற வேண்டாமா?

குமுறுகிறதா, இவருக்கு! குள்ளநரிபோல பேசுவதும், தந்திர சாகசங்களைச் செய்வதும் தானே, ஆச்சாரியாரின் நித்ய நடவடிக்கைகளாயிருக்கின்றன.

இது, அவரது, அலட்சிய மனோபாவம் அல்லது திறமைக் குறைவு—இரண்டில் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்.

இத்தகைய ஒருவரின் பிடியில் சிக்கி எத்தனை நாட்களுக்குத்தான், அவதிப்படுவது?

நாட்டின் வேதனைகள் கண்முன் தெரிகின்றன!—அதனை காணும் ஆச்சாரியாரும், அடிக்கடி நம் கண்ணில் தென்படுகிறார்!! ஆனால், அந்த வேதனைகளைப்போக்க எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை.

அவரோ, திறமைசாலியென்கிறார்கள்!—பலனோ, பூஜ்யம்.

ஆகவே, அவருடைய போக்கில், ஏதோ குறையிருப்பது, வெளிப்படுகிறது.

இந்தக் குறையினைக் களைந்து, “நாட்டை ஆளவந்திருக்கிறோம்’’ எனும் பொறுப்பினை உணர்ந்து, பாதையை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும்.

பஜனைச் சப்தம், பலனளிக்கவில்லை-நெஞ்சில் நேர்மை, கடமையில் ஆசை, மக்களுக்கு சேவை செய்யும் ஆர்வம் மலரவேண்டும.

மலருமா? அல்லது, தி மு.கவின் குமுறல் எரிமலை, வெடிக்கத்தான் வேண்டுமா?

✲

டிராம்வே தொழிலாளர் அவதி

தி. மு. க. தீர்மானம்

(3)“சென்னையில், கடந்த ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வந்த டிராம்வே கம்பெனியை அதனுடைய உரிமையாளர்களான வெள்ளையர்கள், நஷ்டம் என்ற பெயரால் திடீரெனக் கதவடைப்பு செய்துவிட்டதால் பொதுமக்களும் 1600 டிராம்வே தொழிலாளி குடும்பங்களும் மிக மிகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, சென்னை சர்க்கார் டிராம்வேயை எடுத்து நடத்தி, மக்களது துயரத்தையும் தொழிலாளிகளின் அல்லலையும் நீக்குவதுடன், டிராம்வே உரிமையாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இம்மாநாடு சென்னை அரசியலாரை வற்புறுத்துவதுடன், டிராம்வே தொழிலாளர்கள் 67-பேர்களைக் கைது செய்ததைக் கண்டிப்பதுடன், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறது.’’

—

5-ம் பக்க தொடர்ச்சி

மனைவி; அழகுக்கொரு மனைவி; பிள்ளைப் பேற்றுக்கொரு மனைவி; உல்லாச வாழ்க்கைகொரு மனைவி என்று 3, 4, மனைவிகளை வெளிப்படையாகத் திருமணம் செய்து கொண்டதை போல இப்பொழுது திருமணம் செய்து கொள்ள முடியாது. ஒரு மனைவியிருக்க மறுபெண்ணைத்தேடித் திருமணம் செய்தால் சட்டப்படி குற்றம். வாழ்க்கைத்துணைவரை இழந்த பெண்ணை தீயிலிட்டுக் கொளுத்துதல் (உடன்கட்டைஏற்றல்) பதிபக்தி சமூகப் பழக்கம். இப்பொழுது உடன்கட்டை ஏற்றல் அதற்கு உதவியாயிருத்தல் பெருங் குற்றம். (சர்க்கார் சட்டம் தண்டிக்கச் செய்யும்) இன்று ஒரு பெண் வயிற்றுப் பிழைப்புக்காகத் தெருவில், வீட்டு வாசலில் நின்றுகொண்டு ஆடவர்களைப் பொருளீட்டும் நோக்குடன் விபசாரத்திற்கு அழைப்பது சட்டப்படி குற்றம். முன்னர் ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி பாஞ்சாலி (திரௌபதி) என்று கூறல் பெருமை. பெண்கள் படிப்பதே பாவம் முன்னர். பெண்கள் படியாமல், கல்வி கற்காமல் இருப்பது பெரும் அநீதி. இன்று பெண்கள் உரிமை வேண்டுகிறார்கள், பெண்கள் அடிமை என்றோம் அன்று.

பெண்கள் பொருளாதாரத்துக்கேற்றபடி உடல் நலத்திற்கு ஏற்றபடி பிள்ளைகளைப் பெற வேண்டும், கட்டுப்பாடு (கர்ப்பத் தடை) வேண்டும் என்று கூறுவதை மறுத்தார்கள் அன்று. இன்று கர்ப்பத்தடை வேண்டும்; மக்கட்பேறு வேண்டும். ஆனால் அளவுக்கு மீறி மக்களைப் பெற்று அல்லல் படக் கூடாது. காசுக்கோர் பிள்ளை காதலுக்கோர் பிள்ளை என்று பெண்கள் பொறுப்புணர்ந்து நடக்க விரும்புகிறார்கள். அரசியலில் ஆட்சி பீடத்தில், யுத்த நிகழ்ச்சிகளில், சர்க்கார் பணிமனைகளில் கல்லூரிகளில், மருத்துவ நிலையங்களில், அஞ்சல் நிலையங்களில் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து பணிபுரியக் கூடாது என்று வைதீக புரிவாசிகள் பேசுகிறார்கள். ஆயினும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகவாழ்வோம் இந்த நாட்டிலே என்று எல்லாத் துறைகளிலும் ஆண்களுடன் பெண்களும் கலந்துபணி புரியும் நிகழ்ச்சிகளைப் பார்த்து இன்று மகிழ்கின்றோம். கற்பு ஒழுக்கம் பெண்களுக்கு மட்டுமின்றி ஆண் பெண் இருசாராருக்கும் அவசியம் என்று கூறுகிறோம். சமூக முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாயுள்ளவைகளை நீக்குவோம், சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான எல்லாச் சீர்திருத்தங்களையும் நாம் செய்வோம்.

சமூக சீர்திருத்தக்காரர்கள் அரசியலில் ஈடுபடலாமா? என்று ஒரு சிலர் கேட்கலாம். சமூக சீர்திருத்தக்காரர்கள் அரசியலில்ஈடுபடலாம். யாருக்காக அரசியல்? மக்கட்காக அரசியல் என்றால் மக்கள் சமூக நலம் முன்னேற்றம் கருதும் சீர்திருத்த நோக்குடையவர்கள் எப்படி அரசியலில் கலவாமல் விலகி நிற்க முடியும்? மனிதன் சமூக வாழ்க்கையில் தவறுகிறான். கொலை செய்கிறான், கொள்ளையடிக்கிறான் திருடுகிறான், பிறர் பொருளைச் சூறையாடுகிறான், கலகம் செய்கிறான். சூதாடுகிறான், மது அருந்தி தெருவில் குழப்பம் செய்கிறான், மோசடி செய்கிறான் என்றால், அரசியலார் இவைகள் யாவும் மனித உரிமை என்று வாளா கிடப்பரோ? அரசியலாரின் சட்டம், போலீஸ், நீதிமன்றம், சிறை, தூக்குத் தண்டனை யாவும் முன்வந்து செயல் புரியும் அன்றோ? அதேபோல் மக்கள் நலம் முன்னேற்றம் கருதி நடைபெறவேண்டிய ஆட்சியில் மக்கள் தேவையுணர்ந்து மக்கட்கு வேண்டிய வசதிகள் செய்ய அரசியலார் தவறிய சமயத்திலும், மக்கள் உரிமையை அலட்சியப்படுத்திய சமயத்திலும் பஞ்சம், வறுமை, பட்டினி, மரணம், வேலையில்லாத் திண்டாட்டம் அமைதியின்மை. அடக்குமுறை தாண்டவம், பொருளாதார சீர்கேடுகள் பெருகி, ஆட்சியாளர்கள்நிர்வாகத்திறமைக் குறைவால் குழப்பங்கள் ஏற்படும் சமயங்களில் அரசியலை ஏற்று நடத்தும் தகுதி எல்லோருக்கும் உண்டு. மக்கள் விரும்பும் ஆட்சியை நிறுவும் உரிமை மக்கட்கே உண்டு. அரசியலிலீடு பட்டவர்கள சமூக சீர்திருத்தப் பணிகளில் கலந்து கொள்ளக் கூடாது—இது வகுப்புவாதம் என்று கருதி விலகி நிற்பதும் கூடாது. மனித சமூகத்திற்காகத்தான் அரசு ஆட்சி பீடம் என்றால், அது ஒரு குறிப்பிட்ட கட்சியாருக்கே சொந்தமாகி விடாது. உடம்பும் உயிரும் அறிவும் போன்றது, சமூக அரசியல் பொருளாதாரம். இதை தனித் தனியே பிரித்தால் இயங்க முடியாது! மனித சமூகம், அரசு செவ்வனே நடைபெற வரி கொடுக்க வேண்டும். அரசியலார் கட்டளையை ஏற்று நடக்கவேண்டும். அரசியலார் மக்கள் உணர்ச்சியையும் தேவையையும் உணர்ந்து நடந்து கொள்ளுதல் வேண்டும்வரிகொடுக்கும்ஒவ்வொரு மனிதனும் வாக்குரிமையுள்ளவனும் அரசியலில் பங்குபெற உரிமையுடையவன். அரசியல் திட்டம் வகுக்கவும் அரசியலை ஏற்று நடத்தவும் திறமைபடைத்தவர்கள்உரிமை உடையவர்களே. இன்று நாம் குடியாட்சியிலிருக்கிறோம் என்பார்கள். அது உண்மை இல்லை. வடநாட்டுச் சுரண்டல், ஏகாதிபத்திய ஆட்சியில் பிணைகப்பட்டுக் கிடக்கின்றோம். அதிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

சாதி மத வெறியால் தூண்டப்பட்ட ஒரு இந்துப பார்ப்பனர் தம் துப்பாக்கியால் காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றான். சைவம் வளர்க்க சைவ மெய்யன்பர்கள் (8000) எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றி அன்று மகிழ்ந்தார்கள். சாதிவெறி மனிதனை மனிதன் தீண்டக்கூடாது. இங்கு உழைப்பாளி தாழ்ந்தவர், உழையாத சோம்பேறி மேல் சாதி. பார்ப்பான் மேல் சாதி; பறையன் பள்ளன் கீழ்சாதி. மற்ற ஏனையசாதிகள் சூத்திர சாதி. சூத்திரன் என்றால் அடிமை, தாசி மகன் என்ற சமூக இழிவு போக்கப்பட வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் மக்கள் வாழ்வு மலர்தல் வேண்டும். மக்கள், கல்வி, அறிவு ஆராய்ச்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுதல் வேண்டும். மதம், கடவுள், மோட்சம், பக்தி, பிரார்த்தனை என்ற பெயரால் பார்ப்பனர்கட்கும் பண்டார ஓதுவார்கட்கும், புரோகிதர் குருமார்கட்கும், பொருள் இழந்தும், அறிவு இழந்தும், மானம்இழந்தும் அடிமை வாழ்வு வாழக்கூடாது. பகுத்தறிவுள்ள மக்கள், மனோதிடம் தன்னம்பிக்கையுள்ளமக்கள், சமூகஇழிவைப் போக்கப் பணியாற்ற வேண்டும். மானம்சிறிது வாழ்வுபெரிது என்று கருதி உயிர் வாழக்கூடாது. மானத்துடன் வீரத்துடன் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற உறுதிப்பாடு நமக்கு வேண்டும்.

இன்று, இங்கு உழுது, விதைத்து, அறுத்தவனுக்கு உணவு இல்லை. உடைகள் பல நெய்து கொடுத்த நெசவுத் தொழிலாளிகள் குடும்பம் குடும்பமாக உடையின்றி, உணவின்றி பிச்சைக்காரர்களாக மாறி தெருவில் அலைகிறார்கள். பட்டினியால் மடிகிறார்கள். மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் உண்டாக்கித் தந்த உழைப்பாளிகள் ரோடு ஓரங்களில் சாக்கடை நாற்றம், மல நாற்றம் நிறைந்த பகுதிகளில் சேரியில்பன்றியுடனும், மாடு கன்றுகளுடனும் குடிசையில் வாடுகின்றார்கள்—வதைகின்றார்கள்! மக்கள் உற்பத்தி பெருக்கம் அதிகம். உணவுஉற்பத்தி குறைவு. பருவ மழையில்லை, பஞ்சம், பட்டினிச் சாவு, தற்கொலை, திருட்டு, வழிப்பறி, கொள்ளை, கொலை, சர்க்கார் சட்டங்களை மீறிக் குற்றம் செய்ய, சிறை செல்ல, தண்டனை அனுபவிக்க துணிவு, ஆகிய செயல்களை இன்று எங்கும் காண்கின்றோம். இந்த நிலைமை சமூகத்தில் வளரக்கூடாது. அரசியலார் பக்தி பிரார்த்தனை வகுப்புகள் நடத்தினால் மட்டும் நிலைமைசீர்படாது. நம்நாட்டுச்செல்வம் பிற நாட்டார் சுரண்டாமல் தடை படுத்தவேண்டும். வடநாட்டு ஆதிக்கம் இங்குவளரவிடக்கூடாது, இவ்விதம் கூறுதல் குற்றமாகாது.

பிற நாட்டவர்கள், பிற சமூகத்தவர்கள் அரசியலில், பொருளாதாரத்தில், கல்வி அறிவு வளர்ச்சியில், விஞ்ஞானத் துறைகளில், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் முன்னேற்றமடைவதைக் காண்கிறோம். நம் சமூக நிலைமைமட்டும் சீர்திருத்தப் படவேண்டாமா? சமூக சீர்திருத்தமென்றால் கைராட்டு சுற்றல், பஞ்சு கொட்டுதல், மண்பானை சட்டிகள் செய்தல், தோல் பதனிடுதல், கூடை பெட்டி முடைதல், கருப்பட்டி வெல்லம் காய்ச்சுதல், ஒவ்வொருவரும் தாம் தினசரி மலம் கழிப்பதை எருவாக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்துதல், காலை மாலை இருநேரமும் ஸ்ரீ ரகுபதி ராகவ ராஜாராம் என்ற பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுதல், ராமாயணம் கீதை படித்தல், சமையல் வேலைகளைச் செய்தல் போன்றவைகளே என்று கருதி இதற்கு அமைப்புகளும் (ஸ்தாபனங்களும்) வைத்துக் கொண்டு, பொதுமக்களிடமும் அரசியலாரிடம் பெரும் நிதி பெற்று வாழ்க்கை நடத்தி வருவோரும் உண்டு. இவர்களை நாம் குறைகூற வேண்டியதில்லை. காலம் இவர்கட்கு நல்லறிவு புகட்டும் என்று நம்புகிறோம்.

வருந்துகிறோம்

திராவிட முன்னேற்றக் கழக நற்றொண்டர்களில் ஒருவரும், திருவண்ணாமலை நகராட்சி மன்ற முன்னாள் தலைவரும், நமது நண்பருமான தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் அருமைத்தாயார் ராதாபாய் அம்மையார் கடந்த 16-ந் தேதி காலை இயற்கை எய்திய செய்தி அறிய மிக மிக வருந்துகிறோம். அருமைத் தாயாரை இழந்த நண்பருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் காலம், அவர் கண்ணீரைத் துடைக்குமாக.

திருத்தணி மறியலும் தேசியத்தாரும்!

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த, திருத்தணியில் கடந்த சில தினங்களாக தோழர் கே. விநாயகம் எம். எல். ஏ. அவர்கள்தலைமையில் நடைபெற்று வரும் அறப்போரினை தமிழகம் அறியும்.

தமிழ் பேசும் மக்கள் நிரம்பிய சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள், ஆந்திர மாகாணத்தில் சேர்க்கப் பட்டிருக்கும் டில்லியின் அறிவிப்பை ஆட்சேபித்து, மேற்படி அறப்போர் நடைபெறுகிறது.

திருத்தணி, பொதட்டூர்ப் பேட்டை, நகரி புத்தூர் போன்ற பல இடங்களில் பெரும்பாலும் தமிழ்மொழி பேசுவோரே வசித்து, வருகிறார்கள். எனினும், ஆந்திர அமைப்பில், மேற்படி பகுதிகள் சேர்க்கப்படுமாம்.

இந்த அறிவிப்பை எதிர்த்து நடைபெறும் மறியலில், எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பு தருகிறார்கள். சுமார் 200 தொண்டர்களுடன் வடஆற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளரான ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, ஓர்நாள், நேரிடையாகவும் பங்கு கொண்டு, அடையாள மறியல் நடத்தியதாக அறிய வருகிறோம்.

நண்பர் விநாயகம் அவர்கள், திருத்தணியில் தங்கி, மத்ய சர்க்காரின் பிடியிலுள்ள ரயில்வே நிலையத்திலும், மாகாண சர்க்காரின் அலுவலகங்களிலும் 'மறியலை' நடத்திவருகிறார்.

இந்த அறப்போரினைக் கண்டு வருவதற்காக தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் மு. கருணாநிதி, அரங்கண்ணல். ராசகோபால் ஆகியோருடன், கடந்த 23—4—53 அன்று திருத்தணிக்குச் சென்று, அறப்போரில் பங்குகொள்ளும் வீரர்களையும் தோழர் விநாயகத்தையும் சந்தித்தார்—அறப்போரின் நோக்கத்தைத் தோழர் விநாயகம் விளக்கி, தி. மு. க.வின் உதவிபற்றிக் கோரினார்.

பொட்டி சீராமுலுவின் மரணத்தையொட்டி ஆந்திர மக்கள் வெகுண்டு எழுந்ததன் விளைவாக, ஆந்திர மாகாணப் பிரிவினைபற்றி டில்லியினின்றும் அறிக்கை வெளி வந்தது.

"ஆந்திரம் தனி மாகாணமாகலாம்"—என்கிற அறிவிப்பு வந்ததும், ஆங்காங்கும் மொழிவழி மாகாணம் பற்றியகிளர்ச்சிகள், முளைத்து விட்டன. கடந்தகிழமை, ஹுப்ளி எனுமிடத்தில், கன்னடிய மக்களால் ஏற்பட்ட கலவரங்கள் சாமான்யமானதல்ல. மக்களின் குமுறலைக் கண்ட கர்நாடக காங்கிரஸ் கமிட்டி, "உடனடியாக சம்யுக்த கர்நாடகம் தேவை" என்று, தீர்மானம் செய்தது—கர்நாடகக்காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா, டில்லிக்கு ஓடோடியும் சென்றுள்ளார்.

கன்னடமொழிபேசுவோரின் உரிமைக் கிளர்ச்சி ஒலிக்கும் அதே நேரத்தில், வங்கம் சிங்கக் குரல் எழுப்புகிறது. வங்காளமொழி பேசுவோர் அனைவரும் ஒன்று சேர்க்கப் பட்ட வங்காள மாகாணம் அமைக்கப்பட வேண்டும்என்று, வங்காளக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்திருக்கிறது.

ஆந்திராவின் தலைவலி தீரு முன், புதிதாக உருவாகியிருக்கும், இந்த முழக்கங்கள் பண்டித நேருவைக் கலங்கடித்திருக்கின்றன.

"ஏனிப்படி வதைக்கிறீர்கள்?"—என்று வங்காளத்துக்குச் சேதி அனுப்பினார். "தீர்மானமெதுவும் போடாதீர்கள்" என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் அகர்வால், வங்கத்துக்குச் சேதி கொண்டுபோனார். 'பண்டித நேருவின் வேண்டுகோள்!—என்றார். மதிக்கவில்லை, வங்காளக் காங்கிரஸ். "நிர்வாக வசதிகளை வைத்தும், மொழியின் அடிப்படையிலும், வங்காள மாகாணம் திருத்தியமைக்கப் படவேண்டும்" என்று, தீர்மானம் போட்டு, டில்லிக்கு அனுப்பியிருக்கிறது.

*

கர்நாடகம்! வங்கம்!! — இந்த இரண்டும், ஆந்திரா கையாண்ட அதே பாதையில், செல்லுகின்றன. பொட்டி சிராமுலு உண்ணாவிரதம் துவங்கியது போல், கர்நாடகத்திலும், வங்கத்திலும் ஒரிருவர் உண்ணாவிரதம் துவங்கியிருக்கிறார்கள். அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து, ஆங்காங்கும் மத்திய சர்க்காரின் சொத்துக்களைச் சூறையாடியும் பாழ்படுத்தியும் 'ஆகஸ்டு முறை'யைக் கையாளுகிறார்கள். எனவே, டில்லி மிரள்கிறது! பண்டிதர் கலங்குகிறார்!!

மொழிவழி மாகாணக் கோரிக்கை காங்கிரஸ் கட்சியால் சிருஷ்டிக்கப் பட்டால், பண்டிதர் ஓரிருவார்த்தையில் நிறுத்திவிட இயலும். ஆனால், இது, மக்கள் மன்றத்திலிருந்து கிளம்புகிறது!—மக்களின் ஆவேசம் கண்ட மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும், பண்டிதரின் தாக்கிதை மீற வேண்டியதாகிறது.

கர்நாடக அரசு அமைப்பதென்றால், பம்பாய் மாகாணத்தின் சில பகுதிகள் — ஐதராபாத்தில் ஓரிரு பகுதிகள்—ஆந்திராவில் சில தாலுக்காக்கள் மைசூர் கன்னடியர் மாகாணத்துடன் சேர்க்கப்பட்டாக வேண்டும்.

அதேபோல வங்கமாகாணத்துக்கும், பிற மாகாணங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பகுதிகள் உள்ளன.

இதுவரையில் வெவ்வேறு மாகாண சர்க்காரின் ஆளுகைக்குட்பட்டிருந்த மொழிவாரிப் பிரதேசங்கள், ஒன்றாகி, புதுமாகாணங்கள் ஏற்படவேண்டும்.

இது, நியாயமான பிரச்னைதான்.

ஆனால், டில்லிக்குப் பெரிய தலைவலியாயிருக்கிறது.

எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த மொழி பேசுவோரிருக்கிறார்களோ, அவர்களை அவர்கள் பேசும் மொழியைக் கொண்டு நிறுவப்படும் அரசில் சேர்ப்பதே, நியாயமாகும்.

இதனாற்றான், ஆந்திர அரசில் சேர்க்கப்பட்டிருக்கும் பெல்லாரி ஜில்லாவை, கர்நாடக மக்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். பெல்லாரியில், பெரும்பாலானோர், கன்னடியமொழி பேசுவோரெனக் கூறப்படுகிறது.

இது சரியா? தவறா? என்று விசாரித்து முடிவுசெய்ய ஐதராபாத் உயர்நீதி மன்ற நீதிபதியான மிஸ்ராவை, டில்லி நியமனம் செய்திருக்கிறது.

ஆனால், இதே தீர்ப்பு, சித்தூருக்கு வழங்கப்படவில்லை!

பெல்லாரி — பிரச்னைக்குரிய மாவட்டம்.

பிரச்னையை ஆராய்ந்தறிய மிஸ்ரா அனுப்பப்படுகிறார்!

சித்தூர்—பிரச்னைக்குரிய பிரதேசம்தான், இதுவும்.

இங்கோ, ஆராய்ந்தறிய எவரும் அனுப்பப்படவில்லை! டில்லி, இட்டதே சட்டமாக இருக்கிறது!!

இந்த 'அநீதி'யை எதிர்த்தே, திருத்தணியில் அறப்போர் நடைபெறுகிறது.

"தமிழ் பேசும் பகுதிகளை ஆந்திராவுடன் சேர்க்காதே!" — என்பதல்ல, திருத்தணி மறியலின் நோக்கம்.

"இஷ்டம்போல் செய்யாதே — எங்களுக்கும் நீதி, கொடு. கமிஷனோ அல்லது மத்யஸ்தரோ அல்லது பொதுமக்கள் வாக்கெடுப்போ, நடத்து" — என்பதுதான், அறப்போரின், முழக்கமாகும்.

ஆனால், இந்த அறப்போர் கூடாது என்று தரங்கையில் கூடிக் கலந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி, தீர்மானம் போட்டிருக்கிறதாம்.

அறப்போர் இப்போது கூடாதாம்—ஆந்திரம் பிரிந்தபின் எல்லை குறித்துச் சண்டைபோடலாம், இப்போது எதற்கு?—என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூறுகிறது.

"விடமாட்டேன்! திருத்தணி, தமிழருக்கே!!" — என்று சண்டமாருதமெனப் பேசியவரும், எல்லைப் பாதுகாப்பு கமிட்டியின் உறுப்பினராக இருப்பவருமான முன்னாள் அமைச்சர் பக்தவத்சலம்தான், மேற்படி தீர்மானத்தைக் கொண்டு வந்தாராம்.

பக்தவத்சலம், "அக்டோபர் அதிர்ச்சி"யை எதிர்பார்த்து, ராஜநடை போட்டுப் பழகிக் கொண்டிருப்பதாக நமக்குவரும் செய்திகள் கூறுகின்றன. அந்த 'பச்சை விளக்கு' தெரிவதன் முன் அறப்போர்! மறியல்!!—என்பது, ஆசையாயிருந்ததுபோலும். இப்போது, கண்டிக்கிறார்! கூடாதென்கிறார்!!

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் இவ்வளவு பாராமுகமாயிருக்கிறதே யொழிய, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி திருத்தணி முதலான இடங்களைத் தன்னோடு சேர்த்துக்கொள்ள ஏராளமான நடவடிக்கைகளை ஆங்காங்கு ஏற்பாடு செய்துவருகிறது.

அவர்களுக்கிருக்கும் சிரத்தை, காமராஜ் காங்கிரசுக்கு இல்லை—தோழர் காமராஜ் எப்போதும், தம்மை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பவரெனக் கூறக் கேட்டிருக்கிறோம். அது, உண்மைதான்போலும்!

*

பெல்லாரிக்காக, கர்நாடக காங்கிரஸ் போராட முஸ்தீபு கட்டுகிறது.

திருத்தணிக்காக, போராடக் கூடாது — என்கிறது, காமராஜர் காங்கிரஸ்.

'நேரு சொன்னாலும் கவலையில்லை!' — என்கின்றனர், வங்கக் காங்கிரசார்.

'நேருவை, இந்த விநாயகம் எதிர்ப்பதா?'—என்று தோள் தட்டுகிறது, காமராஜர் காங்கிரஸ்.

கண்ணிரண்டும் போனபின் சித்திரம் வாங்க நினைக்கும் காமராஜர் காங்கிரசை நினைக்க நினைக்க விந்தையாயிருக்கிறது!

தோழர் விநாயகத்துக்கு முதலமைச்சர் ஆச்சாரியார், மறியல் சம்பந்தமாகக் கடிதம் எழுதி, மறியலைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டாராம். ஆனால், விநாயகம், "மறியல், மாகாண சர்க்காருடன் நடத்தப்படும் போராட்டமல்ல. நேரு சர்க்காருடன் நடத்தும் போராட்டமாகும். மாகாண சர்க்கார் வேண்டுமானால், இங்குள்ள நிலைமையை மத்ய சர்க்காருக்கு எடுத்துக் கூறட்டும். எமது நியாயமான கோரிக்கைக்கு நேரு சர்க்கார் செவி சாய்க்கும்வரையில் விடமுடியாது!' — என்று பதிலெழுதிவிட்டாராம்.

இந்த விஷயத்தை, நம்மிடம், நேரில் தெரிவித்தார்.

நேரு சர்க்காருடன், திருத்தணி தமிழர்கள் போராடுகிறார்கள்!

தமிழ்நாட்டுக் காங்கிரசோ, அவர்கள் முதுகில், குத்துகிறது!! அறப் போரினைக் கைவிடும்படி தூண்டுகிறது — தமிழர்கள் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறும் ஆச்சாரியார், 'வேண்டாம்' எனக் கடிதம் தீட்டுகிறார்.

காங்கிரஸ் கமிட்டியும், தீர்மானம் தீட்டுகிறது — இவர்கள், தமிழர்களின் வாழ்வுக்குப் போராடுகிறார்களாம்!

நேற்றுவரை சங்கநாதம் எழுப்பிய பக்தவத்சலம், 'பல்டி' அடிக்கிறார்—தீர்மானம் தீட்டுகிறார்.

காரணம், வேறெதுவுமல்ல. வங்கக் காங்கிரஸ் கமிட்டிக்கு அகர்வாலைத் தூது அனுப்பினர், காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு. இங்கும், தூதோ, கடிதமோ, வந்திருக்கும். அதைக் கண்டதும், 'பல்டி' படலம் ஆரம்பமாகியிருக்கிறது. திருத்தணி அறப்போர், அநாவசியமெனப்படுகிறது! டில்லிக்குக் கை தூக்கும் தமிழ்நாட்டு காங்கிரசின் நிலையை, காங்கிரசிலுள்ள இளைஞர் குழாம், எண்ணிப்பார்க்கவேண்டும். 'ஜே' முழக்கமல்ல பெரிது. எதிர்காலம்! சுகவாழ்வு!!—ஆனால், இன்றைய தேசியத் தலைவர்கள் அதனைக் கருதுவதில்லை. அதன் எதிரொலிதான், தரங்கம்பாடித் தீர்மானம்!

*

மொழிவாரி மாகாணக் கிளர்ச்சி குறித்து, பண்டித நேரு, அடைந்திருக்கும் கலக்கமும் குழப்பமும் மிக மிக அதிகமாம்.

காங்கிரசின் முன்னைய தீர்மானம் தானே, அது!—என்றுகேட்கலாம்.

உண்மை! அவரே, வாதாடியிருக்கிறார்!!—ஆனால், இன்று, தனித் தனி மாகாணங்களாக அவையவை பிரிந்து போகும் உணர்ச்சி வலுப்பதைக் காண மிரளுகிறார்.

ஒரே இந்தியா—பாரதமாதா — அகண்டபாரதம்; இது போன்ற மோகன வார்த்தைகளில், பிரிட்டிஷ்காரன் விட்டுப்போன அதே 'இந்தியா'வை ஆளலாம் என்று அதிக ஆசை கொண்டிருந்தது, இன்று சரிவதால் அவருக்குச் சஞ்சலம் ஏற்படுகிறது.

மொழிவாரி மாகாணங்கள் பிரிந்தாலும், அவை டில்லி ஆதிபத்யத்தின் கீழ் தான் இருக்கப் போகின்றன. எனினும், கலங்குகிறார்.

பிரிவினை வளர்ந்தால், தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டுமெனும் அக்கரை வளரலாமல்லவா? அது எங்கே கொண்டு போய் விடுமென்பதை, அறியாதவரல்லவே, பண்டித நேரு!

ஆந்திரம், வங்கம், கர்நாடகம், இவைகள் மட்டுமல்ல மகாராஷ்டிரமும் தனி மாகாணம் கோருகிறது. இருதினங்களுக்கு முன்பு, பூனா நகரசபை இது சம்பந்தமாக தீர்மானம் செய்திருக்கிறது.

இவைகளைக் காணும் பண்டிதர் ஒரு சமயம் கலங்குகிறார், மற்றோர் சமயம் கோபப்படுகிறார். ஏப். 28ந் தேதி மகாராஷ்டிரத்திலுள்ள பெல்ஹாம் எனுமிடத்தில் பேசிய பண்டித நேரு தமது உள்ள எரிச்சலை வெளியிட்டுள்ளார்." ஆந்திரன், கன்னடியன், வங்காளி, மகாராஷ்டிரன் என்று இப்படியே பிரித்துக் கொண்டுபோனால் இந்தியன் என்பது, என்னாவது? இந்திய தேசம் என்கிற வார்த்தை என்னாவது?" என்று வேதனையோடு வெளியிட்டுள்ளார், இந்த வளர்ச்சியைக் காணும், டில்லி தர்பார்-இப்போது, ஆடுகிறது.

மொழிவழி மாகாணக் கிளர்ச்சி செய்வோர்—அவர்கள் காங்கிரஸ்காரரானாலும்—டில்லியின் மீதே பாய்கின்றனர்.

காரணம், அதற்கான அதிகாரத்தை, டில்லி வைத்துக் கொண்டிருப்பதால்.

பிஞ்சிலேயே நிலை இவ்வாறானால், நாளைக் காய்த்து பழமாகி விட்டால் என்னென்ன சஞ்சலம் ஏற்படுமோ என்று டில்லி பீடம் அஞ்சுவதில் ஆச்சரியமென்ன!

பண்டிதருக்கேற்படும் சஞ்சலமும் கலக்கமும், 'ஏக இந்தியா' எனும் போதையின் விளைவு.

அதனால்தான், ஆங்காங்கும் இது போன்ற பிரச்னைகள், வலுக்காதபடி 'அவல் கேட்டால் உமியைக்கொடுத்தாவது' விஷயத்தை மூடிவிட முயலுகிறார். அந்தோ பாபம்! அவரைப் போலத்தான், 1800-ம் ஆண்டு முதல் சில காலம்வரை ஜெர்மனியிலிருந்த பிச்சட் எனும் தத்துவ நிபுணர், "ஐரோப்பா என்பது ஒரே தேசம்!" என்று அலறியபடி இருந்தார். யாரோ சில விஷமிகள், ஐரோப்பாவிலே பிளவுகளை உண்டு பண்ணுவதாகக்-கூறினார். "ஏசுவின் விசுவாசிகளாகிய நாம் ஒரே நாட்டு மக்கள்!" என்று வர்ணித்தார். ஆனால், ஐரோப்பாவின், இன்றைய நிலை என்ன?—இதனை, 'பாரதமாதாவின் புத்திரர்களன்றோ, நாம்!' எனக் கூறிப் பசப்பிடும் பண்டிதர் பரம்பரை, எண்ணிப்பார்க்க வேண்டும்!

*

உரிமைக் கிளர்ச்சியை, நெடுநாட்கள்வரை மூடிவைத்துவிட முடியாது. ஒவ்வொரு கட்டமாக வளர்ந்து, முழுவிடுதலை எனும் முழக்கம் ஏற்படாமல் போகாது. இதனை அரசியல் வரலாறு அறிந்தோர், அறிய முடியும். இந்த எண்ணத்தை, அந்த நாள் காங்கிரஸ் தலைவராக விளங்கிய மௌலானா முகம்மதலி அவர்கள் 1911 ஜனவரி 4-ந் தேதிய "காம்ரேட்" எனும் இதழில் எழுதினர்—"இந்தியாவின் பிரச்னை ஏறத்தாழ சர்வதேசப் பிரச்னையாகும்" என்று. 1928-ல் காகிநாடா காங்கிரஸ் மாநாட்டுத் தலைமையுரையிலும் இதை விளக்கினர்.

"இந்தியா என்ற நிலப் பரப்பில் பல்வேறு வர்க்கம் உள்ளன. அவைகளை ஒன்றாகச்சேர்த்து ஒரே கூட்டமாக்கிக் காட்ட ஒட்டு வேலை நடக்கிறது. அது, பயன்தராது.

இந்தியா என்பது ஒரே நாடல்ல—இங்குள்ள பிரச்னை ஒரு சர்வதேசப் பிரச்னை போன்றதாகும்"

என்பதாக. அவருக்குப்பின், அவர் கூறிய வார்த்தைகள், உண்மையானதைக் கண் 'முன்னால் கண்டோம்! ஆகவே, 'இந்தியா' என்று ஒட்டுப் போடும் வேலை, நீடிக்க முடியாது என்பதை நன்றாக அறிகிறோம், நாம். அதனாலேயே, இன்று வளர்ந்து வரும் மொழிவழி மாகாணக்கோரிக்கையை ஆதரிக்கிறோம்.

தமிழகம்—கேரளம்—ஆந்திரம் — கன்னடம், எனும் நான்கும் தத்தமக்குரிய தனியரசைப் பெற்று, ஒற்றுமையும் நேசபாவமும் கொண்ட கூட்டாட்சியை நிறுவுவதும் சாத்யமெனக் கூறுகிறோம்.

நான்கு காலணாக்களைக் கொண்ட ஓரணா!—இந்த உதாரணம், போதும்.

ஆகவேதான், அந்தந்த மொழிவாரிப் பிரதேசங்கள் பற்றிய முடிவுகள், நீதி நேர்மையுடன் முடிவு செய்யப்பட வேண்டுமென விரும்புகிறோம்.

நாமும் ஆந்திரரும், நாளை வாழப் போகிறவர்கள்தான்! நமக்குள்ளேற்படும் சச்சரவுகளை, பொதுவாக வைத்துத் தீர்த்துக் கொள்வதே நல்லது! — இதையே, திருத்தணி அறப்போர், தெரிவிக்கிறது.

அதனாலேயே,நாமும் திருத்தணி அறப்போரினை ஆதரிக்கிறோம்.

திருத்தணி அறப்போர் வீரர்கள் வாழ்களத்தில் புகுந்து முதுகில் குத்தும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ், ஒரு நாள், தன் தவறை உணரத்தான் செய்யும். ஆகவே, அதனை மன்னித்து, தமது அறப்போரினை தொடர்ந்து நடத்தி வருவார்களாக.

தரங்கம்பாடி காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றிய அதே நாளில் லால்குடியில் கூடிய தி. மு. க. திருச்சி மாவட்டமாநாடு, திருத்தணி அறப்போர் குறித்து, நிறைவேற்றிய தீர்மானம், இதோ:—

5. (அ) நாம் ஏற்கனவே மாநில மாநாட்டிலே தீர்மானித்துள்ளபடி சித்தூர் மாவட்டத்தில் திருப்பதிவரை உள்ள பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று இந்திய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துவதுடன், அந்த மாவட்டம் பற்றி விசாரணை நடத்தி முடிவுகூற உடனடியாக ஒரு எல்லைக் கமிஷனை, கமிஷனரையோ நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

(ஆ) சித்தூர் பிரச்னைக்காக கடந்த இரு கிழமைகளாக திருத்தணியில் நடைபெற்றுவரும் தமிழரின் அறப்போரை ஆதரிப்பதுடன் அதனை முன்னின்று நடத்தும் தோழர் கே. விநாயகம் எம். எல். ஏ. அவர்களைப் பாராட்டுவதோடு, சித்தூர் மாவட்டத்திலுள்ள தி. மு. க. கிளைகள் இந்த அறப்போரில் ஒத்துழைப்பதை இம் மாநாடு பெரிதும் பாராட்டுகிறது.

★

தஞ்சையில் புயல் நிவாரண நிதி நிறைவு விழா

"சொன்னதை, முடித்துவிட்டோம்!"

—மு. கருணாநிதி

"நாடகம் வழங்கிய பேருதவி இது!"

—சி என். ஏ.

28—4—53 செவ்வாய் மாலை 6-மணிக்கு தஞ்சை திலகர் திடலில் திராவிட முன்னேற்றக் கழகப் புயல் நிவாரண நிதியளிப்பு நிறைவு விழா நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர் கே. ஆர். செல்லமுத்து திராவிடப் பண் பாடினார் பிறகு தஞ்சைத் தோழர்கள் ஏ. வி. பதி, கே. பட்டு ஆகியோர் முன்மொழிந்து வழிமொழிய தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்கினார். தலைவர் முன்னுரையில் நிதியளிப்பு விஷயமாக விளக்கிப் பேசினார். பிறகு தோழர் என்.எஸ். இளங்கோ பேசினார். தொடர்ந்து தோழர் அ. பொன்னம்பலனார் பேசினார்.

அடுத்து புயல் நிவாரண நிதிக் குழுச் செயலாளர் தோழர் மு. கருணாநிதி பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே, அண்ணா அவர்களே, பெரியோர்களே, தோழர்களே!

இன்றைய தினம் தஞ்சை நகர தி. மு. க. வின் சார்பில் கூட்டப்பட்டிருக்கும் இந்தக் கூட்டம், புயலால் பாதிக்கப் பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரண நிதியளிப்பது என்று தஞ்சையில் கூடிய பொதுக் குழுவில் தீர்மானித்ததற்கிணங்க, என்னைச் செயலாளராக்கி அமைக்கப் பட்ட நிதிக்குழு தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை முடித்து விட்டது என்ற செய்தியை மக்களுக்குத் தெரிவிக்கவே கூட்டப் பட்டது. தஞ்சையில் பொதுக்குழு கூடிய அன்று மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ரூ 25000 வசூலித்துக் கொடுப்பது என்ற தீர்மானத்தைக் குறிப்பிட்டுப் பேசிய போது இதைக் கொடுக்க நம்மால் இயலுமா எனக் கவலைப்பட்டோம். தூங்கும் போதும் தூங்கி விழித்த பிறகும் இதே சிந்தனையாக இருந்தோம். ஆனால் நமக்கு நிதி தேவையாயிருக்கிற நேரத்தில் பயன்படுகிற நம்முடைய ஆண்டவனான 'பவுடர்' நமக்கு உதவினார். நாடகங்கள் மூலமும், கட்டணப் பொதுக்கூட்டங்கள் நடத்தியும், சிறு சிறு தொகைகளாகக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் சேர்த்து அனுப்பியும் ரூபாய் 27500 திரட்டியிருக்கிறோம். இந்தத் தொகையில் ரூபாய் 5000 பொதட்டூர்ப் பேட்டை நம் தோழர் தியாகராஜன் அவர்களிடம் முன் பணமாகக் கொடுத்து, பாதிக்கப் பட்ட மக்களுக்கு பணமாகக் கையில் கொடுப்பதற்குப் பதில் ஆடைகளாகவும்—வேட்டிகளாகவும் சேலைகளாகவும்—கொடுக்க பொதட்டூர்ப் பேட்டைக் கூட்டுறவுக் கைத்தறிச் சங்கத்தாரிடம் தயார் செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்த ஆடைகளின் ஓரத்தில் கருப்பும் சிகப்பும் பொறித்த நம் சின்னத்தை அமைக்கச்சொல்லியிருக்கிறோம்.

ஏககாலத்தில் புயலால் பாதிக்கப்பட்டோருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிப்படும் கைத்தறித் தொழிலாளர் படும் வேதனையைத் தீர்க்கவும் பயன்படும் என்ற எண்ணத்தால தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

சென்னையில் அண்ணா, கே. ஆர். ராமசாமி, சிவாஜிகணேசன் நடித்த முதல்நாடகத்தில் ரூ. 7000 மிச்சப் பட்டது. அந்த நாடகத்தை நடித்த போது அண்ணாவின் உடல்நிலை நலிந்திருந்தும் ஏற்றுக்கொண்ட பொறுப்பை எண்ணி நாடகங்களில் பங்கெடுத்துக்கொண்டார். இதைத் தொடர்ந்து பல நாடகங்கள், நிதிக் கூட்டங்கள் நடத்தினோம். இதைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள முக்கிய ஊர்களிலும், பீகார், ஒரிஸா, இந்தோனேசியா, சிலோன் ஆன வெளி நாடுகளிலும் இருக்கும் நம் இயக்கப்பற்றுள்ள தோழர்கள் பணந் திரட்டி அனுப்பிவைத்தார்கள். சென்னை ஹோட்டல்களில் பணியாற்றுபவர்களும், தெருக்களில் ரிப்பன் விற்பவர்களும் பணந்திரட்டிக் கொடுத்தார்கள். இந்த நேரத்தில் நிதிசேர்க்க உதவிய ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன். சென்னையில் மே மாத இரண்டாம் வாரத்துக்குள் ஒரு மாபெரும் கூட்டத்தைக் கூட்டி நிதியை சென்னை கவர்னரிடம் ஆடைகளாகத் தர இருக்கிறோம். இங்கே புயல் வீசும்போது இந்திய உபகண்டத்தின் முதல் அமைச்சர் நேருவுக்கு திருவாங்கூரில் தென்றல் வீசிக்கொண்டிருந்தது. இங்கே புயலால் பாதிக்கபபட்டு மக்கள் அவதிக்குள்ளானபோது திருவாங்கூருக்கு வந்த—அல்ல—விஜயம்செய்த நேரு, இந்தப்பக்கம்கூடத் திரும்பிப்பார்க்காமல் டில்லிக்குத் திரும்பிச் சென்றார். நம்மீது வடநாட்டாருக்குப் பற்றோ அக்கறையோ இல்லை. இங்கே பிச்சைகேட்கிறோம்—மத்திய சர்க்கார் திருப்பிப் பார்க்க மறுக்கிறது. ஏன் இந்த அவல நிலை? காரணம், நம் வாழ்வு, நம்மைப்பற்றிய பரிவோ பாசமோ இல்லாத ஒரு சர்க்காரிடம் சிக்கியிருக்கிறது. அங்கே இருப்பது ஒரு பொம்மை சர்க்கார், ஓட்டை சர்க்கார். இங்கே நம்மை ஆளுகிற ஆச்சாரியார் எதற்கெடுத்தாலும் ஆண்டவனை அழைக்கிறார். தஞ்சை மாவட்டக் கலெக்டர் தோழர் பழனியப்பன் ஆச்சாரியாருக்குச் சரியாக புத்தி புகட்டியிருக்கிறார் எல்லா ஆண்டவன்களையும் ஆலயத்தில வைக்காமல், நாம் எந்தப் பிரசாரத்தை இதுவரைச்செய்து வந்தோமோ அதையே பின்பற்றி, ஆண்டவன்களைக் கண்காட்சிசாலைப் பொருள்களாக்கி வைத்திருக்கிறார். அதுகூட ஆச்சரியமில்லை. அந்தக் கண்காட்சிசாலையை ஆச்சாரியாரைக் கொண்டே திறந்துவைக்கச் செய்திருக்கிறார். இத்தாலிய நாட்டு அரசியல் அறிஞன் மாக்கியவல்லி, தான் எழுதிய நூலில், "அவதிப்படுகிற மக்களின் மனதை ஆண்டவன் பக்கம் திருப்பிவிடு, எதற்கெடுத்தாலும் ஆண்டவன் மேல் பாரத்தைப்போடு" என்றுசொல்லியிருக்கிறான். அதைப் பலப் பலச் சர்வாதிகாரிகள் கையாண்டனர். அதையேதான் கடைசிச் சர்வாதிகாரி ஆச்சாரியாரும் கையாளுகிறார். ஆச்சாரியார் கையாளுகிற அற்புதமான தந்திரம் ஒருபுறம் ஆண்டவனை அழைப்பதுவும், மறுபுறம் மத்திய சர்க்காரை எதிர்க்க மாற்றுக்கட்சிக்காரர்களைத் தன்னோடு ஒத்துழைக்க அழைப்பதுவுந்தான். ஆனால் அவர் நம்கோணத்திலிருந்து வடநாட்டு எதிர்ப்பைக் காட்டவில்லை" என்றுகூறி மறுபடியும் புயல் நிவாரண நிதி திரட்ட உதவிய அனைவருக்கும் நன்றிகூறி முடித்தார்.

பிறகு தி. மு. க, பொதுச் செயலாளர் அண்ணாதுரை பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே தோழர்களே,

தஞ்சையில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானித்தபடி தஞ்சை திருச்சி மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய் 25000 வசூல் செய்து நிவாரண நிதி அளிப்பதென்று நிச்சயித்து நண்பர் கருணாநிதி அவர்களை செயலாளராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்தோம். அதன்படி நாங்கள் நிச்சயத்ததற்குமேல் சேர்ந்துவிட்டது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை, மக்களிடத்தில தெரிவிக்கத்தான் இக்கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம. அந்தப் பணத்தை ஆடைகளாக தருவது என்ற முடிவை நண்பர் கருணாநிதி உங்களிடம் கூறினார். இந்தமுடிவை நாங்கள் பொதுக்குழுவிலேசெய்து அதைப் பொதுக் கூட்டத்திலே சொன்னபோது மாற்றுக் கட்சி நண்பர்கள் இதைச்செய்ய இவர்களால் முடியுமா? என்று சந்தேகப் பட்டார்கள். இந்த நிதியைத் திரட்டி நாங்கள் தெரிவிக்கும் போது 'இது என்ன பிரமாதம்' என்று கேலிபேசுவார்கள். எது எப்படியிருந்தாலும் இந்த நிதியைத் திரட்டிவிட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதியைத் திரட்டித் தர உதவிய இயக்கத் தோழர்களுக்கும், நடிக நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நிதியைத்திரட்டித் தந்த நண்பர் கருணாநிதியை, திரட்டித் தந்த களிப்புமகளைப்பும் மாறுவதற்கு முன்னாலேயே களத்துக்கு அனுப்பப் போகிறேன். இந்த நிதியை வெற்றிகரமாக திரட்டித் தந்தது போலவே, அந்தப் போராட்டத்தையும் செவ்வனே நடத்தி, வெற்றிதேடித் தருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரையிலே செய்த எந்த வேலையையும் ஒழுங்காக செய்து முடிக்காமல் விட்டதில்லை. இதற்குக்காரணம், நாங்கள் பயிற்சி பெற்ற ஈரோட்டுப் பள்ளிக்கூடம், எங்களுக்கு இந்தப் பக்குவத்தை தந்திருக்கிறது. இப்போது அதில் ஆசிரியர் அதிகமாகவும், மாணவர்கள் குறைவாகவும் இருந்தாலும், அப்போது நாங்கள் பயிற்சி பெற்றபோது அது நன்றாகத் தான் இருந்தது.

நாங்கள் நிதி திரட்டி முடித்தவுடன் நம்முடைய மாற்றுக் கட்சி நண்பர்கள், இது என்ன பிரமாதம் என்பார்கள். இவர்கள்தான் நாம் நிதி திரட்டுவதற்கு முன்பாக இது முடியுமா? என்று கேட்டவர்கள். ஆகையால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. எனக்கு முன்னாலேயே பேசிய நண்பர்கள் நம்முடைய சர்க்காரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டம் அறிவாளிகள் நிறைந்த மாவட்டம் என்று எனக்குத் தெரியும். இந்தக் கூட்டத்திலே இருக்கிற பொதுமக்களையும், காங்கிரஸ் சோஷியலிஷ்ட் நண்பர்களையும், ஓரத்திலே ஒதுங்கியிருக்கிற நண்பர்களையும் நான் கேட்கிறேன், அவர்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லட்டும்; இந்த மாகாணத்தின் ஆட்சிபீடத்துக்குவந்த ஆச்சாரியார் அவர்வந்த ஒரு வருடகாலத்தில் என்ன பிரமாதமான காரியத்தைச்சாதித்தார். யாராலும் செய்யமுடியாத எந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார். இவருக்கு முன்னாலே ஆட்சிபீடத் தலைவர்களாயிருந்த குமாரசாமிராஜா, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆகியவர்களின் சாதனைகளைவிட சிறந்தது என்றுசொல்லிக் கொள்ளக்கூடிய எதைச்செய்திருக்கிறார். ஒரு ஆண்டு காலத்திற்குள்ளே பல சாதனைகளைச்செய்த தோழர்களை நான் இப்போது காட்டுகிறேன். அவர்களைவிட எந்தப் பிரமாதமான காரியத்தை ஆச்சாரியார்செய்திருக்கிறார். ஆசியாவின் மேற்குக் கோடியிலே இருக்கும் எகிப்து நாட்டின் அமைச்சர் நகிப், அவர் ஆட்சிபீடம் ஏறிய ஓராண்டுகாலத்துக்குள் மக்களைப் பற்றிக் கவலைப் படாமல் உல்லாச வாழ்வு நடத்திய மன்னனை விரட்டியிருக்கிறார். அங்கே இருக்கிற அரசியல் கட்சியில் உள்ள ஊழல்களை எல்லாம் நீக்கி, அரசியல் கட்சிக்காரர்கள் மக்களிடத்திலிருந்து பணத்தைக் கொள்ளையடிக்காமல் செய்திருக்கிறார். 200 ஏக்கருக்கு மேல் எவ

உடன் பிறந்தே கொல்லும்
வலிகளான
நாட்பட்ட பாரிச வாய்வு, இளம் பிள்ளை முடக்கு, ஆருத ரணம், வாதக் கை கால்கள், தீராத கட்டிகள். விரை நோய், விஷக்கடிகள், விஷநீர் புரைகள், முடக்குவாதம் முதற் பல வலிகளுக்கு சத்துரு.
விஷ குரு
விலை ரூ. 3
விவரங்களறிய:—
R. குமுதம் & கம்பெனி,
7, கிருஷ்ணவிலாசம்—
பாட்டர் தோட்டம்,
சென்னை-2.

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/668
எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துக்ளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ, 10-8-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும்; மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)
SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN ST., கொழும்பு-11.

அடுத்த வாரம்

லால்குடி தி. மு. க. அரசியல் மாநாட்டில் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவு அடுத்த வார இதழில், வரும்.

ரும் வைத்திருக்கக் கூடாது என்று சட்டமிட்டு இருக்கிறார். அதற்கடுத்தாற் போல் முது பெரும் கிழவர் முசாதிக் பாரசீக நாட்டு மண்ணிலே இருக்கும் எண்ணெய்க் கிணறுகளை, இங்கிலாந்தும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவும் பங்கு போட்டு கொள்ளையடிப்பதைத் தடுத்திருக்கிறார். அந்த ஏகாதிபத்தியங்களுடைய எதிர்ப்பை எல்லாம் மீறியிருக்கிறார் மீறியதோடு அல்லாமல், அமெரிக்காவுக்கே போய் என் நாட்டு மக்கள் பசியால் துடித்துக் கொண்டிருப்பதை என்னால் பொறுத்திருக்க முடியாது என்று நடுங்கும் குரலிலே சொல்லியிருக்கிறார். மண்ணுக்குள்ளே இருக்கிற எண்ணெயை, நிபுணர்கள் தயவு இல்லாமல் வெளியில் எடுக்க முடியுமா? என்று கேட்டார்கள். எடுத்துக் காட்டினார். அந்த எண்ணெயை வெளிநாடுகளுக்கு எடுத்து அனுப்ப முடியுமா என்று கேட்டார்கள். எடுத்து அனுப்பினார். அதை எங்கள் தயவு இல்லாமல் விற்பனை செய்ய முடியுமா என்று கேட்டார்கள். விற்றுக்காட்டினார். நகீபும், முசாதிக்கும் செய்ததைப் போல் எந்த அதி அற்புதமான காரியத்தை ஆச்சாரியார் சாதித்திருக்கிறார்? எதற்கெடுத்தாலும் ஆண்டவனைப் பற்றிப் பேசுகிறார். யாருக்கு ஆண்டவன் தேவை? நாட்டிலே இருக்கிற ஏழை மக்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது? காலில் கல் அடித்தால் "முருகா" என்று அழைக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்குள் நுழையும் போது, நிலை, தலையிலிடித்தால் 'ஆண்டவனே' என கூப்பிடுகிறார்கள். ஆண்டவனை எதற்கெடுத்தாலும் அழைக்கும் ஏழை மக்களிடத்தில், ஆண்டவனைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமென்ன இருக்க முடியும்? சீமான்கள், மிட்டா மிராசுகள், கள்ள மார்க்கட்டிலே கொள்ளையடிப்போர் இவர்களிடம் கடவுள் பிரச்சாரம் தேவை? ஏழைகளிடத்திலே ஏன்? லத்தீன் மொழியில் ஒரு பழமொழி உண்டு, Vox populi Vox Dei. அதாவது ஆங்கிலத்தில் The voice of the people is the voice of God என்று பொருள், மக்கள் குரல்தான் மகேசன் குரல் என்பது அதன் அர்த்தம். மக்கள் குரல் ஆச்சாரியாரை ஆட்சி பீடத்துக்கு அனுப்பியதா? சென்ற தேர்தலில், மக்கள் ஆச்சாரியார் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடமேறக் கூடாது என்று தீர்ப்பளித்தனர். இதை ஆச்சாரியார் மதித்து நடந்தாரா? பின் ஏன் ஆண்டவனைப் பற்றிப் பேசுகிறார்"

என்று பேசி, நிதிதிரட்ட உதவியவர்களுக்கு நன்றி கூறி முடித்தார்.

பிறகு தஞ்சை நகர தி. மு. க. செயலாளர் தோழர் பட்டு நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது.

*

நடக்க இருப்பவை

ஒரக்காட்டுப்பேட்டை

9—5—53 சனி மாலை தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல் ஆகியோர் பேசுவர்.

வடநாடு—தென்னாடு, உணர்ச்சி வளர்கிறது!

வஞ்சனை மிக்கது டில்லி

'கங்கைகொண்ட' மண்ணில் டால்மியாபுரம்!

மதியழகன் முழக்கம்

—::—

லால்குடியில் நடைபெற்றதிருச்சி மாவட்ட தி. மு. க. அரசியல் மாநாட்டைத் துவக்கி வைத்த தோழர் கே. எ. மதியழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:—

"திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட இந்த மூன்றாண்டுக் காலத்தில் அது சாதித்திருக்கும் காரியங்களை, ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஜனநாயக முறையில், உறுப்பினர், செயலாளர் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கழகம் வலிவுள்ளதாக ஆக்கப்பட்டிருக்கிறது. செயற் குழுவில் அங்கம் வகிக்கவும், கிளைக்கழக செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் படவும், பொறுப்பான பதவிகளை வகிக்கவும் கழகத் தோழர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன் வருவதைக் காண்கிறோம். இது எதனைக் குறிக்கிறது? கழகத்தின் மூலம், மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்தைத் தானே! கழகத் தோழர்களின் உள்ளங்களில் பெருக்கெடுத்தோடும் உணர்ச்சி வெள்ளங் கண்டு மாற்றுக் கட்சியினர் மருள்கின்றனர். கடந்த பொதுத் தேர்தலின் போது, நமது ஆதரவு பெற்ற பலர், சட்டசபை உறுப்பினர்களானார்கள். நம்முடைய ஆதரவு பெற்றால், தாம் வெற்றிபெற முடியும் என்கிற எண்ணம் அவர்களுக்கு மட்டுமல்ல, பல அரசியல் கட்சியினரிடம் கூட வளர்ந்திருக்கிறது. இத்தகைய வளர்ச்சி, சாமான்யமானதா?

கடந்த ஆண்டுகளில் தி. மு. க. செய்து வந்த முழக்கம் வீணாகிவிடவில்லை. உண்மை நிறைந்த அம் முழக்கம், எப்படி வீணாகிட முடியும்? வடக்கு—தெற்கு, என்று நாம் பேசினால் முன்பு சீறினார்கள்! இப்போது, நாம் பேசுவது போல, சட்டசபையிலே பேசுகிறார்கள்—டில்லி பார்லிமெண்டிலே முழக்கமிடுகிறார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்பு அன்னா மாஸ்கரீன் எனும் தோழியர் டில்லியின் ஆதிக்கம் குறித்து, ஆதாரங்களோடு பேசினார். "இந்த ஆதிக்கத்தைச் சகித்துக்கொண்டு, எத்தனை நாட்களுக்குச் சேர்ந்திருக்க முடியும்?" என்று கேட்டார். அவர், தமிழகப் பிரதிநிதியல்ல — திருவாங்கூரைச் சேர்ந்தவர். "திருவாங்கூர், டில்லியின் பிடியினின்று விடுபட்டாலன்றி, சுகவாழ்வு கிட்டாது", என்று முழக்கமிடுகிறார். என்ன அர்த்தம் இதற்கு? அவர் மட்டுமல்ல, ஆட்சியை நிர்வகிக்கும் ஆச்சாரியார்கூட அடிக்கடி கூறிக்கொள்கிறார், "டில்லி உதவி செய்ய வேண்டும் — இல்லையெனில் விமோசனம் இல்லை", என்பதாக. அவரது மந்திரிகள் அடிக்கடி நொந்துகொள்கிறார்கள், "வரிவாங்கிச் செல்லும் டில்லி, பணஉதவி அளிப்பதில்லை" என்று. அதுமட்டுமா? இரு வாரங்களுக்கு முன்பு சென்னையைச்சேர்ந்த பார்லிமெண்டு உறுப்பினர்கள், டில்லி சர்க்காருக்கு, ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள்—பத்துகோடி கடன் வேண்டும் என்பதாக. அந்த மகஜரில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்,

"மத்யசர்க்கார், வடநாட்டில் ஏராளமான நீர்த்தேக்கங்களைக் கட்டுகிறதேயொழிய. தென்னாட்டைக் கவனிப்பதில்லை", என்று. இது, எதனை விளக்குகிறது! டில்லியின்பிடி, காங்கிரஸ் ஆட்சியினரிலிருந்து, காங்கிரஸ் கட்சியிலிருப்போர்வரை, கலங்கும்படிச் செய்திருக்கிறது. டில்லி, ஓரவஞ்சனை காட்டுவதாக காங்கிரசாரே கூறுகின்றனர்! இல்லை என்று யார், மறுக்க முடியும்? புயல் அடித்தது—சுமார் 10 கோடி ரூபாய் நஷ்டமெனக் கணக்கிடப் பட்டது. டில்லிக்குத் தெரிவிக்கப் பட்டது. என்ன உதவி செய்தது, டில்லி? கேவலம் ரூபாய் முப்பதினாயிரம் அனுப்பியது! பெரிய சர்க்கார், அது—பத்து கோடி நஷ்டம் என்று அறியும்—ஆனாலும் முப்பதினாயிரம் ரூபாய் மட்டுமே அனுப்பியது. திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், மிக மிகச் சாதாரணமானவர்கள்—வாழ்க்கை வசதி இல்லாதவர்கள். எனினும் சுமார் ரூபாய் முப்பதினாயிரம் சேர்த்து, புயல் நிவாரண நிதிக்கு அளிக்கப் போகிறோம்! இந்த உபகண்டத்தையே ஆள்வதாகக் கூறும், டில்லியும் முப்பதினாயிரம் மட்டுமே அளிக்கிறது!! இது, எவ்வளவு பெரிய நயவஞ்சகம்? இதே போல, கைத்தறி நெசவாளர்கள் விஷயத்திலும், கண்மூடித்தனமாக இருந்து வருகிறது. அவர்கள் வாழ, வழி செய்ய முன் வரவில்லை. ஆனால் காஷ்மீரக் களத்திலோ, கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிச் செலவழிக்கிறது. காஷ்மீரத் தலைவர் ஷேக் அப்துல்லா, இவர்கள் நினைக்கிற அளவுக்கு ஏமாளியாக இல்லை. எனினும், அவரைக் காப்பாற்றுவதாகக் கூறி, ஏராளமான பணத்தை இந்திய சர்க்கார் அழிக்கிறது. இதுமட்டுமா?! இங்கே, கவர்னர் ஒருவரை அனுப்பிவைத்து, லட்சக்கணக்கான ரூபாய்களை, அவருக்கு விரயம் செய்யக் கட்டளையிடுகிறது. வடநாட்டுக் கவர்னருக்கு மாதா மாதம் எவ்வளவு சம்பளம்? ஆண்டுக்கு பத்து லட்சம் ரூபாய்கள்!

யாருடைய பணம், இந்தப் பத்து லட்சம்? வாகன வசதி, ஆடம்பரமான வாழ்வு, இதற்கு நம்முடைய வரிப்பணமா?

எல்லா வகைகளிலும் நம் வாழ்வைச் சுரண்டிச் சீர்குலைக்கிறது, டில்லி ஆதிபத்யம். இதன் சூதினை, மாற்றாரும் உணர்ந்துவருகிறார்கள்.

இத்தகைய உணர்ச்சிகள் உருவாகிற நேரத்திலே, நாம், கூடியிருக்கிறோம்.

இங்கே, வடநாட்டு டால்மியாவின் பெயரால் இருக்கும் ஊரின் பெயரை மாற்றவேண்டுமென தீர்மானம் செய்யப்போகிறோம். யார், இந்த டால்மியா? சமீபத்தில் 3000 தென்னாட்டுப் பார்ப்பனர்களை அழைத்து, தட்சிணை வைத்து, காலில் வீழ்ந்தாராம், டால்மியா பிரபு! யாருடைய பணம், அது? நமது ஏழை மக்கள் உழைத்துக் கொட்டுவதுதானே! இங்கிருந்து சுரண்டிச் செல்லும், வடநாட்டுக் கும்பலுக்கு, நாம் எச்சரிக்கை விடுக்கும் முறையில், இந்தப் போராட்டம் நடைபெறவேண்டும்.

கங்கைகொண்ட சோழபுரம் இருக்கும் திராவிடத்திலே, டால்மியாபுரமா! மாமல்லபுரம் இருக்கும் மண்ணிலே, வடநாட்டின் பெயரா!!

ரஷ்யாவில், ஸ்டாலின் கிராட் இருக்கிறது — ஆனால் இங்கோ, பணமுதலையின் பெயர் வைக்கப்படுகிறது. இதைக் குறித்து ஏழைகளின் பங்காளர்கள் என்று கூறிக் கொள்ளும் இந்தச் சர்க்கார் வெட்கப்படவேண்டும்!

டால்மியாபுரம், பெயரினை மாற்றுவது, எளிது — சர்க்காருக்கு. பெயரை மாற்றுவது ஒன்றும் பெரிய விஷயமல்ல. இந்தியாவின் பெயரையே 'பாரதம்' என்று மாற்றவில்லையா? ஐக்கிய மாகாணம் என்றிருந்ததை 'உத்திர பிரதேசம்' என்று மாற்றிவிடவில்லையா? — பெயரை, நினைத்தால், மாற்றிடலாம். ஆனால், டால்மியாபுரத்தின் பெயரினை மாற்ற டில்லி பீடம் முன் வராது! ஏனெனில், டால்மியாக்களின் உதவியாலேதான், அது வாழ்கிறது. வடநாட்டுக்காரர்களுக்கு மனவருத்தமேற்படும் சிறு காரியத்தையும், வடநாட்டு சர்க்கார் செய்யாது. ஆகவே, நாம் இந்த அறப்போரினை, ஒரு எச்சரிக்கைப் போராகக் கருதவேண்டும். எல்லாப் பக்கங்களிலும், வடநாட்டுமீது வளர்ந்து வரும் அதிருப்தியைக் காணவேண்டும் — நாம், முன்பு சொன்னோம்! இன்று அவர்கள் கூறுகிறார்கள்!! எனவே, நமது பணி வீண்போகாது. வெற்றி தரும்!" என்பதாக, வீரமுழக்கம், செய்தார்.

—

12-ம் பக்க தொடர்ச்சி

அடுத்த தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசியதும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை இரு நாள் நடவடிக்கைகளைக் குறித்தும், தி. மு. க.-வின் வளர்ச்சி குறித்தும், சொற்பொழிவாற்றினார். தலைவர் தோழர் சம்பத் அவர்களின் முடிவுரைக்குப்பின் மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவரான தோழர் எம். எஸ். மணி நன்றி கூற, இனிது முடிந்தது.

மழையின் காரணமாக இரவு, நாடகம் நடைபெறவில்லை.

*

லால்குடிமாநாடுகளில், மக்கள் நம்மீது வைத்திருக்கும் ஆர்வத்தின் எல்லையைக் காண முடிந்தது. கட்டுப்பாடு! ஆர்வம்!!—இரண்டும். எவ்வளவுதூரம் தோழர்களிடம் பரவியிருக்கிறதென்பதைக் கண்டோம்.

பந்தல் போதாத அளவுக்கு, மக்கள் நிரம்பி வழிந்தனர், இங்கு.

ஒரு பக்கம் கலைக் கண்காட்சி!—அங்கும் ஜனத்திரள்.

அதற்கருகில், சின்ன தொருகடைத்தெரு—நூலகங்கள், சிறு கடைகள் முதலியனவோடு. அங்கும் மக்கள் வெள்ளம்.

இதனைக்கண்டேன், இருநாட்களிலும்! இதயம், வியந்தது! வாழ்த்துக்களைக் குவிக்கிறேன். வளர்க, தி. மு. க வீரர்தம் சேவை! வாழ்க திருச்சித் தீரர்கள்!!

["கண்டுவேந்தோன்."]

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மானேஜர்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

நமது நாடகத்தைக்காண அவ்வளவு மக்கள் கூட்டம்—சமாளிக்க முடியாத அளவு கூட்டம் குவிந்ததால், நிர்வாகிகள், எல்லோரையும் இலவசமாகவே நுழையவிட்டனர்.

விளைவு, சமாளிக்க முடியாமற் போகவே, நாடகத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.

இரவு மணி ஒன்று—அப்போதுதான், பந்தலுக்கு வெளியில், வந்தேன். கள்ளிக் காட்டில், துயிலும், காளைகளைக் கண்டேன்!

கொள்கைமீதுள்ள ஆர்வத்தால், "கிடைத்தால் உண்போம்! வியர்த்தால் குளிப்போம்! கட்டாந்தரையே கட்டில்! கையே தலையணை!" என்று கருதும் உளப்பான்மை கொண்ட கழகத் தோழர்களின், ஆர்வ உள்ளத்தை அறிய இரண்டாம் நாளும் வாய்ப்பு கிடைத்தது.

இரண்டாம் நாள் நண்பகலுக்கு மேல், எதிர்பாராதபடி, கனத்த மழை துவங்கியது. பந்தலோ, அதைத் தாங்கக்கூடியதல்ல! மழை, மக்களைக் குளிப்பாட்டிற்று. நனைக்கும் மழையையும் பொருட்படுத்தாது, கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், சொற்பொழிவுகளைக் கேட்டனர். மழையோ ஓயவில்லை! தரையோ, சேறு மயம்!! தயங்கவில்லை, மக்கள். இருந்த இடம்விட்டு நகரவில்லை. பொதுச்செயலாளர் பேசிமுடித்தபின்னரே, அவ்விடம் விட்டுக் கலைந்தனர். இத்தகைய ஆர்வத்தை எங்கே காண முடியும்! நம்மிடமன்றி வேறெங்கே காணமுடியும்!!

*

ஆர்வமும், ஆவேசமும் நிரம்பிய பல்லாயிரக்கணக்கான மக்கள், லால்குடி மாநாட்டிலே, திரண்டிருந்தனர்.

25-4-53 அன்று காலை மாநாடு ஆரம்பமாகுமுன், சிறுதையூரிலிருந்து மாபெரும் ஊர்வலமாக மாநாட்டுத் தலைவர்கள் அழைத்து வரப்பட்டனர். முடிகொண்டான் முனுசாமி, திராவிட நாட்டுப்பண் பாடினார். பிறகு, சீர்திருத்த மாநாட்டினை மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

"பொதுச்சேவையில் 50 ஆண்டுகளை ஓட்டிவிட்டேன். என் வாழ்நாளில் இப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது இல்லை. இப்போது நான் பேசவரவில்லை! இளைஞர்களாகிய நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் இனி? பேசியது போதும்! காரியமாற்ற முனையுங்கள்!!" என்று மூதாட்டியார் அறிவுரை வழங்கினார்கள்.

பிறகு சீர்திருத்த மாநாட்டிற்கு வந்திருந்தோரை வரவேற்று அம்பில் தர்மலிங்கம் பேசினார்.

பின்னர், மறைந்த மாவீரர் பாண்டியனாரின் வாழ்க்கையை கருத்துகள் நிறைந்த வில்லுப்பாட்டுமூலம், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமது குழுவினருடன் பாடினார்.

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

மாநாட்டுக் கலைக் கண் காட்சியை நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். அவர் பேசுகையில், "நான் இன்று, இங்கே, கலைக்கண் காட்சியைத் திறந்துவைக்கிறேன். சென்ற கிழமை, முதலமைச்சர் ஆச்சாரியார், தஞ்சைப் பெரு நகரிலே ஓர் கலைக்கண் காட்சியைத் திறந்து வைத்தார். எங்களுடைய இடத்தைப் பிடித்துக் கொள்வதில், எப்போதுமே ஆச்சாரியாருக்கு ஆசையிருக்கிறது. இல்லையென்றால் கலைஞர்களாகிய எங்களுக்குக் கிடைக்க வேண்டிய இடத்தை சட்டசபையில் பிடித்துக் கொண்டுதானே மந்திரியானார்!

அவர், கோவில் சிலைகளின் கண் காட்சியைத் திறந்து வைத்தார். நானோ, பகுத்தறிவுக் கண் காட்சியைத் திறந்து வைக்கிறேன்.

கலையைக் கொண்டுதான் ஆரியம் நம்மை அடிமைப்படுத்தியது. அதே கலையைக் கொண்டு தான் நாமும் வெற்றி பெற வேண்டும்" என்பதாகப் பேசினார்.

பிறகு அம்பில் தர்மலிங்கம் முன்மொழிய தோழர்கள் ஜி. பராங்குசம், டி. கே. தாமரைச் செல்வன், சம்பத் ஆகியோர் வழிமொழிய பூவாளூர் தோழர் பொன்னம்பலனார் அவர்கள் தலைமை வகித்து, அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். பிறகுபச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் தோழர் என். வி. நடராசனும் சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர்.

நண்பகல் 3-மணிக்கு, இயக்கத் தோழர்களின் இன்னிசைக்குப் பிறகு மாநாடு மீண்டும் கூடியதும் தோழர் தில்லை-வில்லாளன் B. A. (Hons), மனித மனவளர்ச்சி குறித்தும், தோழிர் டி. கே. தாமரைச் செல்வன் 'நாடகமும் சினிமாவும்' குறித்தும் தோழியர் அருண்மொழி, 'சமூகச் சீர்திருத்தம்' எனும் தலைப்பிலும் குடந்தைத் தோழர் எஸ். கே. சாமி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் இரா. நெடுஞ்செழியன் 'விஞ்ஞானமும் கடவுளும்' எனும் தலைப்பில் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின், மாநாடு முடிந்தது.

தி. மு. க. மாநாடு

"விடுதலைக் கொடி பறந்து அழைக்குது காணீர்!" — என்று தோழர் ஹனீபாவின் கீதம் ஒலிக்க, இரண்டாம் நாள் திருச்சி மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக அரசியல் மாநாடு ஆரம்பமாயிற்று. தலைமைக் கழகப்பொறுப்பாளர் தோழர் கே. எ. மதியழகன் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றி மாநாட்டைத்துவக்கிவைத்தபின், அம்பில் தர்மலிங்கம் வரவேற்புரை ஆற்றி, தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரேரேபித்தார். அதனை வழிமொழிந்து தோழர்கள் கண்ணதாசன், இளம்வழுதி எம். எ., பி. எல்., இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர்பேசிய பின், தோழர் ஈ. வி. கே. சம்பத் மாநாட்டுத் தலைமையேற்று, சிந்தையெலாம் கருத்து மழை பொழிவது போன்ற அரியதோர் தலைமைச் சொற்பொழிவாற்றினார்.

இடைவேளைக்குப்பின்...

நண்பகல் உணவுக்குப்பின் தோழர் கே. ஆர். செல்லமுத்துவும் இன்னும் பலரும் இயக்கப் பாடல்களைப் பாடினர். மூன்று மணிக்கு மாநாடு துவங்கியதும் தோழர் கோவிந்தசாமி எம். எல். எ. அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் அக்கிரமங்களைக் குறித்துப்பேசினார். பிறகு, தோழர் பி. பி. கே. ராஜாசிதம்பரம் எம். எல். எ. அவர்களும் தோழர் பழனியாண்டி எம். எல். எ. அவர்களும் பேசினர்.

எம். ஜி. இராமச்சந்தர்

மாநாட்டில் நடிகச் செல்வர் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டு, "கலைஞர்களுக்கும் அரசியல் வாழ்வில் இடமிருக்கவேண்டும்" என்று பேசினார். "தி. மு. க.வைத் தவிர கலைஞர்களின் வாழ்க்கையைச் செப்பனிட முயலும் இயக்கத்தை நான் கண்டதில்லை. எள்ளி நகையாடவும் எங்களைத் தூற்றவும், ஏராளமானோர் இருக்கிறார்கள். ஆனால், எங்களையும் மனிதர்களாக மதித்து, எங்களுக்கும் பொது வாழ்வில் உணர்ச்சி உண்டு என்பதை அறிந்து, இடம் தரமுன்வந்தது அண்ணா ஒருவரே தவிர வேறு யாருமில்லை. சமீபத்தில் வடநாட்டு திரைப்பட நடிகர்கள் சென்னையில் வந்து கிரிக்கெட் விளையாடி பணம் திரட்டியபோது, நானும், கலைவாணர் என். எஸ். கே. முதலிய சிலரும் அதனை எதிர்த்து மறியல் செய்தோம். அப்போது, "எங்களைக் கைதுசெய்துவிட்டதாக யாரோ அண்ணாவிடம் கூறியிருக்கிறார்கள். உடனே, அவர்— அது உண்மையா?' என்றறிய, எங்கெல்லாமோ அலைந்தார். இத்தகைய மனோபாவமும் அன்பும் கொண்டோர் யாரிருக்கிறார்கள்? இவரை, எமது தலைவராக நாங்கள் கருதுவதில் தவறென்ன? சுமார் பத்து ஆண்டுகளாகவே அண்ணாவை அறிவேன் — அன்றுபோல்தான் இன்றும் அன்பு செலுத்துகிறார். அவரது தலைமையில் இயங்கும் தி. மு. க.வின் அறிவுப் பணிக்கு, கோளப் பகுதியைச் சார்ந்த நான், என்னாலியன்றவரைப் பாடுபாடுவேன்," என்று அருமையாகப் பேசினார்.

சிவாஜி கணேசன்

பிறகு தோழர் சிவாஜி கணேசன் பேச ஆரம்பிக்கையில், "தன்னை உலகுக்கு அறிமுகம்செய்து வைத்தது அண்ணா அவர்கள்தானென்று குறிப்பிட்டு, "அவரது அன்பு வழியால் என்போன்றோர், இன்று சிறப்படைந்திருக்கிறோம். அறிவியக்கம், எங்களுடைய இருதயமாகும். இதற்காக, எமது உடல்-பொருள்-ஆவி, எதனையும் தரத்தயாராகயிருக்கிறோம்! உரிமைபெற, திராவிட நாடுபெற, என்போன்றோர் எப்போதும் தயார்!", என்று ஆவேசத்தோடு குறிப்பிட்டார். பிறகு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசினார். அவர் பேசுகையில், "திராவிட நாட்டினைப் பெற இளைஞருலகம் தயாராகயிருக்க வேண்டும்" என்று ஆர்வத்தோடு பேசினார். பிறகு தோழர் என். எஸ். இளங்கோ, விவசாயப் பிரச்னைகள் குறித்து தக்க புள்ளி விபரங்களோடு பேசியபின் தோழர் எ.கே. வேலன் சொற்பொழிவாற்றினார். இந்நிலையில், மழை பெய்ய ஆரம்பித்தது!

அதுவும் கனத்த மழை. கொட்டகைக்குள், மக்கள் வெள்ளத்தைப் போட்டியிடுவதுபோல், தண்ணீர், வெள்ளமாகப் பெருகியது. சேறு! உட்காரவும் முடியவில்லை!! எனினும், மக்கள் தயங்கவில்லை.

"மழை முடியட்டும் இரவு 8-மணிக்குமேல் மாநாட்டைத் துவங்கலாம்," என்ற கருத்துடன், மாநாட்டுத் தலைவர், மக்களுக்கு அறிவித்தார்.

"இல்லை-வேண்டாம். தொடர்ந்து நடத்துங்கள். மழையை நாங்கள் பொருட்படுத்தவில்லை"-என்று முழக்கமிட்டவாறு மக்கள், உட்கார்ந்தனர். கீழே, சேறு! கவலைப்படவில்லை.

லால்குடி மாநாட்டின் சிறப்பே, ஏராளமான தாய்மார்கள் வந்து கலந்துகொண்டதாகும். தாய்மார்களுக்காக மட்டும் முப்பது பெண் தொண்டர்கள், தோழியர் இளமுருகு பொருட்செல்வி தலைமையில், பணிபுரிந்தனர். அவ்வளவு தாய்மாரும், மழையைக் கண்டு அஞ்சவில்லை. அமர்ந்து இருந்தனர்.

மக்களின் ஆர்வத்தைக் கண்ட தலைவர், மாநாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு தோழர் மு. கருணாநிதி உணர்ச்சி ததும்பப் பேசினார்.

(11-ம் பக்கம் பார்க்க)

தியாகர் கல்லூரிக்கு உதவுங்கள்!

வண்ணாரப்பேட்டையில்

நாடகக் கலைவிழா

சென்னை-வண்ணையம்பதி
தியாகராயர் கல்லூரி உதவி நிதி

2—5—53 முதல் 14—6—53 வரை மாலை 6-30க்கு
(ஒவ்வொரு வார கடைசி கிழமைகளில்)

2—5—53	"சந்திரமோகன்"	சி. என் எ., கே. ஆர். ராமசாமி.
3—5—53	"நீதிதேவன் மயக்கம்"	,,
9—5—53	"காளி தாஸ்"	ஏலூர் பிரபாத் தியேட்டர்ஸ் பந்தா கனகலிங்கேஸ்வரராவ் பார்ட்டி
10—5—53	"சித்ர நளியமு"	
16—5—53	"இரத்தக் கண்ணீர்"	எம். ஆர். ராதா குழுவினர்
17—5—53	"லக்ஷ்மி காந்தம்"	,,
23—5—53	"ஸ்ரீ வள்ளி"	டி. ஆர். மகாலிங்கம், எஸ். வரலட்சுமி
24—5—53	"பணம்"	என். எஸ். கிருஷ்ணன், டி. எ. மதுரம்.
6—6—53	"ஔவையார்"	டி. கே. எஸ். சகோதரர்கள்.
7—6—53	"ரத்தபாசம்"	,,
13—6—53	"மனோகரா"	கே. ஆர். ராமசாமி குழுவினர்.
14—6—53	"பவளக் கொடி"	எம். கே. தியாகராஜ பாகவர், எஸ். டி. சுப்புலட்சுமி.

டிக்கட்டு :- சீசன் ரூ. 25, தினசரி :- ரூ. 3, 1, அணா 8.

இங்ஙனம்,
இசையரசு: எம். எம். தண்டபாணி தேசிகர்,
அமைப்பாளர்.
தியாகராயர்கல்லூரி நிதிக்கமிட்டி.

வண்ணையம்பதி கல்லூரிக் காரியாலயத்தில் டிக்கட்டுகள் கிடைக்கும்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.